295

...proved by the Text Book Committee, Madras.

# CARNATIC FAIRY TALES

## No. 1

BY

BALASARASWATHI DEVAKUNJARI AMMAL

Fifth Edition—Revised & Enlarged.

K. PALANIANDI PILLAI & Co.,
...LERS, PUBLISHERS, etc.
...cane, Madras.
1921 [Price As 6.

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை.

# கர்நாடக யோகினிக் கதைகள்.

## (முதற்பாகம்)

இது

திரிசிரபுரம்

பிரஹ்மஸ்ரீ - திரு - அ - சிவாநந்தசாகர யோகீசுவரர்

ஜேஷ்ட புத்திரி

பாலஸரஸ்வதி தேவகுஞ்சரியம்மாள்

இயற்றியது.

ஐந்தாம் பதிப்பு.

கே. பழனியாண்டி பிள்ளை கம்பேனி

திருவல்லிக்கேணி

சென்னை.

Rights Reserved.] 1921. [விலை அணா 6.

## சரித்திர அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | மாதுளகன்னி கதை. | 1—18 |
| 2. | நான்கு ராஜகுமாரத்திகளின் கதை. | 18—36 |
| 3. | எள்ளுப்பதுமை கதை. | 36—52 |
| 4. | சௌந்தரி என்னும் வணக்கமுள்ள ஏழைப்பெண் கதை | 53—67 |
| 5. | மந்திரி பெண் மஹாராஜாத்தியான கதை. | 67—81 |


Sadhu Press, Royapettah, Madras.

# INTRODUCTION.

Fairy tales have their own interest and charm to young imaginative minds. Tamil literature has of late been getting flooded with many adaptations from English fairy tales. But almost all these in English although amusing and entertaining to the extreme to the young folk, lack what may be called the moral incentive that will so readily appeal to the Indian mind. The value of fairy tales will be certainly enhanced if a moral fervour is introduced into them as it has been done in this book. I have much pleasure to say that this new edition of Carnatic Fairy Tales is of enormous value to the young generation whose minds are forming and whose characters are in the making. The tales, all the five of them, are well told and are written in a style that ought to be attractive to the young. The booklet is quite suitable in furnishing extra reading moral lessons for students of the Lower secondary classes.

G. DAMODARA MUDALIAR, B. A. L. T.,
(now) Sub Assistant Inspector of Schools,
George Town Range,
MADRAS.

Triplicane,
20th June 1915.

# முகவுரை.

நான் பாலப்பருவமா யிருந்தபோது எனக்குக் கதை கேட்பதில் அதிக ஆவலுண்டு. அதை அறிந்த என் பிதா அநேக கதைகள் சொன்னார். அப்போது நான் வசனரூபமான பாரதம், இராமாயணம், ஸ்காந்தம் முதலிய மத சம்பந்தமான கதைகளைப் படித்து வருகையில் எனக்குக் கிடைத்த இங்கிலீஷ் பெயரி டேல்ஸ் (Fairy Tales) என்னும் புஸ்தகத்தைக் குறித்து என் பிதாவை வினவ, அவர் அந்தக் கதைகளைத் தமிழில் பெயர்த்துச் சொல்லி வந்தார். நான் முன்னால் அவரிடம் கேட்டிருந்த கதைகளெல்லாம் அப்போது என் ஞாபகத்துக்கு வந்தன. அதன் மூலமாக மறந்தகதைபோக ஞாபகத்திலுள்ள கதைகளைச் சமயங் கிடைத்தபோது எழுதிக்கொண்டே வந்தேன். இடை யிடையே வேறு சிலர் கூறிய கதைகளையும் எழுதிக்கொண்டு வந்தேன். இந்தக் கதைகள் நெடுங் காலமாக நமது தேசத்தில் கர்ண பரம்பரையாக வழங்கி வந்தமையால் சிலருக்கே பயன்பட்டன வன்றிப் பெரும்பாலும் பயனில்லாமலே யிருந்தன. இத்தன்மையான கதைகள் நமதுதேசத்தில் உண்டு என்பதைப் பலர் அறியாமலு மிருக்கலாம். இந்தச் சிறிய கதைகளில் தெய்வபக்தி, மாதுரு பக்தி, பிதிர் பக்தி, சகோதர நேசம், ஜீவகாருண்யம், மத சம்பந்தமான விஷயங்கள், பலவகையான நீதிகள், பெண்களுக்குரிய கற்புடைமை முதலிய பலவிஷயங்க ளடங்கியிருப்பதாலும், மனதுக்கு மகிழ்ச்சிதரும் இயல்பு உள்ளமையாலும் கல்வி பயிலும் இளம் சிறுவர்க்குப் பெரும் பயன் தரும் என்பதை உத்தேசித்துக் கர்நாடக யோகினிக் கதைகள் என்று பெயரிட்டு இப்போது சொற்ப விலையில் இதனை வெளியிடத் தொடங்கினேன்; மற்றவைகளும் கிரமமாக வெளிவரும்.

பாலஸரஸ்வதி தேவகுஞ்சரியம்மாள்.

உ

செந்திலாண்டவன்
திருவடி துணை.

# கர்நாடக யோகினிக் கதைகள்.

---

## முதலாவது
## மாதுள கன்னி கதை.

நடு நாட்டில் துரைசிங்கன் என்றொரு அரசனுண்டு. அவன் மத்தியபுரி என்னும் நகரத்திலிருந்து அரசு செலுத்தி வந்தான். அவனுக்கு அவன் செய்த புண்ணிய வசத்தினால் ஒரு புத்திரன் பிறந்தான். அரசன் தன் புத்திரனுக்குச் செய்ய வேண்டிய ஜாதகர்மாதிகளைச் செய்து, புத்திரனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் காப்பாற்றி வளர்த்து வந்தான். இந்தக் குழந்தைக்கு விஜயன் என்று பேர். அவன் ஏழாவது வயதில் கல்வி பயிலத்தொடங்கிப் பதினைந்து வயதுக்குள் அரசர்களுக்குரிய யானையேற்றம் குதிரையேற்றம் வில்வித்தை முதலியவைகளையும் கற்றுக்கொண்டு சிறந்து விளங்கினான். இவனுக்குப் படிப்பிலிருந்த ஆசைக்களவில்லை. அதனை யறிந்த அரசன் பல இடங்களிலிருந்து கல்விமான்களை யழைப்பித்து அவர்களைப் பரிபாலித்து வந்தான். அவர்களிடத்தில் விஜயன் பலவகையான சாஸ்திரங்களையும்

பயின்று மஹா நிபுணனென்று கண்டவர் மகிழ்ந்து கூற விளங்கினன்.

2. இப்படியிருக்கையில் ஒருநாள் வட நாட்டிலிருந்து ஒரு ஜோதிஷன் இராஜ சபைக்கு வந்து துரைசிங்க இராஜனோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அரசன் தன் புத்திரனுடைய ஜாதகத்தைக் கொண்டு வந்து ஜோதிஷனிடத்தில் கொடுத்து அதற்குப் பலன் சொல்லச் சொன்னன். ஜோதிஷன் அந்த ஜாதகத்தைப்பலவாறு புகழ்ந்து அரசனைப் பார்த்து "மஹாராஜாவே, இந்த ஜாதகன் அநேக இராஜாக்கள் தன்னை வணங்கும்படி சிறந்து விளங்குவான்; ஆனல் இவன் இவனுடைய இருபதாம் வயதில் தன் வீட்டை விட்டுப் பிரிந்து போய்க் கஷ்டப்பட்டுப் பின்பு இருபத்தைந்தாவது வயதில் வீடு வந்து சேர்ந்து மகுடம் புனைந்து அரசு செலுத்துவான்" என்று கூறினன். அரசன் அவனுக்குச் செய்யத்தக்க மரியாதை செய்தனுப்பிவிட்டுத் தன் புத்திரனுக்குக் காவலர்களை நியமித்து வீட்டை விட்டுச் செல்லாதிருக்கும்படி திட்டஞ் செய்தான். இப்பொழுது அரசகுமாரனுக்கு வயதுபத்தொன்பது. இராஜன் தன் குமாரனுக்கு விவாகஞ் செய்யும்படி முயன்றும் விஜயனுக்கு அந்த விவாக சம்பந்தத்தில் விருப்பமில்லாமையால் அது தடைபட்டு நின்று போயிற்று.

3. விஜயனுக்கு இருபதாவது வயது தொடங்கிற்று. மந்திரி பிரதானிகளின் புத்திரர்களையழைத்து, அவர்களை விஜயனுக்குக் காவல்தோழர்களாயமைத்து அவனை விட்டுப் பிரியாமலிருந்து காத்து வரும்படி அரசன் கட்டளையிட்டான். ஒருநாள்

தண்ட காஷாய வஸ்திரந்தரித்த ஒரு ஸந்யாசி இராஜ சபைக்கு வந்து அந்த இராஜனை ஆசீர்வதிக்க, அரசன் எழுந்திருந்து அவருக்கு வந்தனை வழிபாடுகள் செய்து ஒரு பொன்னாசனத்தில் உட்கார வைத்துத் தானும் சிங்காதனத்தில் உட்கார்ந்து கொண்டு, அவரை நோக்கி "ஸ்வாமி தேவரீர் எவ்வெவ்விடங்களுக்குப் போய் வந்தீர்கள்? அவ்விடங்களிலென்ன விநோதங்களைப் பார்த்தீர்கள்? அவைகளை எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டான். ஸந்நியாசி, "நான் சுற்றிப் பாராத நாடு நகரங்கள், வனம் வனாந்திரங்கள், மலைகள் ஒன்றுமில்லை. வடநாட்டில் இலக்ஷ்மணபுரி என்றொரு நகரமிருக்கிறது. அதையடுத்த வனத்தில் சில நாள் நான் தவஞ்செய்து கொண்டிருந்தேன்; அங்கொரு விநோதம் பார்த்தேன். அதென்ன வென்றால், அவ்வனத்தில் மனித சொரூபம்போன்ற அநேக சிலா விக்ரகங்கள் கிடந்தன. அவற்றை உற்றுப்பார்த்தால் இருபது வயதுக்குட்பட்ட மனிதருடைய ரூபமாகத் தோன்றுகின்றன. நான் அவைகளைக் கண்டு ஆச்சரியமடைந்து, பின்பு அங்குள்ள ஒரு காளிகாதேவி கோவில் பூசாரியைக் கண்டு "இதென்ன ஆச்சரியம்" என்று கேட்டேன். அவன் 'ஸ்வாமி! இந்தக் கோவிலுக்கு வடக்கே நூறு யோசனை தூரத்தில் ஒரு பெரிய மாதுளவிருக்ஷம் இருக்கின்றது. அந்த மரம் எப்போதும் பூ, காய், கனிகளோடு விளங்கிக் கொண்டிருக்கும். அந்தக் கனிக்குள் ஒரு தேவகன்னிகையிருக்கின்றாள். ஆதலால் அந்த வனத்தை அநேக பூதங்களும் தேவர்களும் காவலாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் மாதுளவிருக்ஷ வடிவ

மாகவே உருமாறியிருக்கிறார்கள். அந்த மாதுள கன்னிகையின் அழகைக் கேட்டு அவளை விவாகஞ் செய்து கொள்ள விரும்பி அநேக ராஜகுமாரர்கள் வருவதுண்டு. அவர்கள் எல்லாரும் அப்படிச் சிலா ரூபமாகச் சபிக்கப்பட்டிருக்கிறார்கள்' என்றான். இது தான் நான் கண்ட அற்புதக்காட்சி" என்று சொன்னார். அரசன், "அந்தப் பெண்ணை யாராவது விவாகம் பண்ணுவார்களோ பண்ண மாட்டார்களோ" என்றான். ஸந்யாசி, "அவள் ஓர் இராஜ குமாரனுக் குரியவள் தானென்று கேள்விப்பட்டேன்" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டு வெளியே போய் விட்டார்.

இவற்றை மறைவாகக் கேட்டுத் தெரிந்து கொண்டவிஜயன் அந்த ஸந்யாசியைப் பின்றொடர்ந்து போய், அவரைப் பணிந்து "ஸ்வாமி! தாங்கள் கூறிய மாதுள கன்னிகையை நான் விவாகஞ்செய்ய விரும்பு கிறேன். அதற்குத் தக்க ஓர் உபாய மெனக்குச் சொல்ல வேண்டும்" என்று இரந்து கேட்டான். ஸந்யாசி, அவனைப் பார்த்து "அப்பா! அவளை விவாகஞ் செய்து கொள்ள விருப்பமிருந்தால் நான் சொல்லுகிறபடி செய்; இலக்ஷ்மணபுரிக்குப் போய், அதை அடுத்திருக்கும் வனத்தைச் சேர்ந்தால் அங்கே ஒரு காளி கோயில் தோன்றும். அந்த அம்மன் பிரத்தியக்ஷ தெய்வம். அவளுடைய காவலிலேதான் அந்த வனமிருக்கிறது. இராத்திரி ஐந்து நாழி கைக்குள் பூஜை செய்து விட்டுப் பூசாரி வீட்டுக்குப் போய் விடுவான். அதன் பின் காளியும் அவ்வனம் போய்ச் சூரியோதயத்துக்கு முன் கோயிலுக்குள் வந்துவிடுவாள். நீ இராத்திரி கோயிலுக்குள் ஒருவரும்

அறியாமல் புகுந்து கொண்டு உள்ளே தாழ்ப்பா ளிட்டுக் கொண்டு நான் சொல்லுகிற மந்திரத்தை ஜபித்துக் கொண்டிரு. விடியற் காலம் காளி வந்து கதவைத் தட்டி உன்னைப் பயமுறுத்துவாள். நீ ஒன் றுக்கும் பயப்படாமலிருந்து என்னைக் கொல்வதில்லை யென்று ஸத்தியஞ் செய்து கொடுத்தால் கதவைத் திறப்பேனென்று சொல். அவள் ஸத்தியம் பண் ணின பின் கதவைத் திற. அவள் உள்ளே வந்த தும் பயப்படாமல் அவளை வணங்கி, உன் கருத்தைச் சொல். அவள் மாதுள கன்னிகையை யடையும் மார்க்கத்தை உனக்குச் சொல்வாள். அதன்படி செய்து விவாகம் பண்ணிக்கொண்டு சுகமாய் வாழ்ந் திரு. ஆனால் இலக்ஷ்மணபுரியில் அவ்வூர் அதிகாரி வீடொன் றிருக்கிறது. அதில் மாத்திரந் தங்கி யிராதே” என்று சொல்லிப்போய்விட்டார். அரச குமாரன் அன்று முதல் அதே வேலையாக இருந்து சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.

5. இப்படிச் சில நாளான பின், இராஜகுமாரன் தன் தோழர் காவலைக் கடந்து போவது அரிதென்று கண்டு ஒரு நாளிரவில் எல்லாரும் அயர்ந்து நித்திரை செய்கிற சமயத்தில் படுக்கையிலிருந்து எழுந்திருந்து ஒருவரும் அறியாதபடி வெளியேறிப்போய் ஓட்ட மும் நடையுமாய் வெகுதூரம் சென்று அங்குள்ள ஒரு மலை யடிவாரத்தில் தங்கினான்.

6. இப்படியாக ஒரு மாதம் இரவும் பகலுமாக நடந்து இலக்ஷ்மணபுரியையடைந்து, மறுநாள் காளி கோவில் போய்ச் சேர்ந்தான். அன்று இரவு அம்ம னைத் தரிசிக்க வந்தவர்களோடு இவனும் போய் ஒரு பக்கத்தில் பதுங்கியிருந்தான்; எல்லோரும்

போய்க் காளியும் வெளியிற் போனபின் கதவைத் தாளிட்டுக்கொண்டு ஜபித்துக் கொண்டிருந்தான். உதயத்திற்குக் காளிகா தேவிவந்து கதவைத் திறக்கும்படி சொல்லியும், அவன் அஞ்சாமல் "என்னைக் கொல்வதில்லை யென்று ஸத்தியஞ்செய்து தந்தால் நான் கதவைத்திறப்பேன்" என்றான். காளிகாதேவி யெவ்வளவோ தந்திரோபாயங்கள் செய்தும், பய முறுத்தியும் அவன் பயப்படாம லிருந்தான். காளி அவனுடைய தைரியத்துக்கு மகிழ்ந்து அப்படியே ஸத்தியஞ் செய்த பின் கதவைத் திறந்துவிட்டான்.

7. காளி உள்ளே புகுந்து தன்னிடத்தில் உட்கார்ந்த பின் அவள் பாதத்தில் வணங்கி, "எப்படியாவது மாதுள கன்னிகையை எனக்கு மணம் புரிவிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தான். காளி மகிழ்ந்து ஏழுமணிகளை யெடுத்து அபிமந்திரித்து அவன் கையில் கொடுத்து "இதைப் பத்திரமாய் வைத்துக் கொண்டு வனத்துக்குட் புகுந்து, நடு மரத்திலுள்ள கனியைப் பறித்துக்கொண்டு ஓட்டமாய் ஓடிவா! ஓடிவரும்போது அந்த வனக்காவல் தேவதைகள் உன்னைத்தொடர்ந்து பிடிக்க வருவார்கள். அவர்கள் அருகே வரும்போது, இந்த மணிகளில் ஒன்றை யெடுத்து அவர்களை நோக்கி யெறிந்துவிட்டுத் திரும்பிப் பாராமல் ஓடிவா; ஏழாவது மணியை எறிந்து விட்ட பின் வெகு வேகமாய் ஓடிவந்து என் கோயிலினருகே வந்து விட்டால், அந்தத்தேவதைகள் திரும்பிப் போய்விடுவார்கள். நீ யென்னிடம் வந்து விடு" என்று கூறி அனுப்பினாள்.

8. விஜயன் அவ்வாறே போய் அந்தப் பெரிய கனியைப் பறித்துக்கொண்டு ஓடோடியும் வந்தான்.

வனக்காவல் தேவதைகள் அவனைத் தொடர்ந்து ஓடி வந்து, அவனைப் பலபடியாகப் பயமுறுத்தியும் அவன் இலக்ஷியம் பண்ணுமல் ஓடிவந்தான். அவர்கள் கிட்ட நெருங்கி வந்தபோது ஒரு மணியை எடுத்து அவர்கள் மேல் எறிந்தான். அது ஆகாய பரியந்தம் நெருப்பாகப் பற்றிக்கொண்டெரிந்தது. அதுகண்டு மகிழ்ந்து விரைந்து நடந்தான். தேவதைகள் அந்த நெருப்பை அவித்துவிட்டு வருவதற்குள் விஜயன் பத்து யோசனை தூரம் போய்விட்டான். இப்படியே அவர்கள் நெருங்கி வந்தபோது ஒரு மணியை யெறிந்து காளிகோயில் எல்லையில் கால் வைத்ததும் தேவதைகள் மறைந்து போனுர்கள்.

9. பின்பு விஜயன் கோவிலுக்குள் புகுந்து அம்மனை வணங்கி நின்றான். அம்மன் களிப்படைந்து "அப்பா குழந்தாய்! நீ ஊர்போய்ச் சேரும் வரையில் இந்தக் கனியை வெகு பத்திரமாக வைத்துக் கொள். ஒருவரும் இதைப் பார்க்கப்படாது. வீடுகளிலாவது வீட்டுத் திண்ணையிலாவது படுக்காதே; அதிகமாய் நித்திரை செய்யாதே; இலக்ஷ்மணபுரி கிராமாதிகாரி வீட்டில் ஒரு க்ஷணங்கூடத் தங்காதே; ஆபத்து வந்தபோது என்னை மறவாதே. க்ஷேமமாய் ஊர்போய்ச் சேர்ந்து இந்த மாதுளம்பழத்தை மெதுவாய் அழுத்தினுல் அது உடைந்துபோகும். அதனுள் ஒரு கன்னிகையிருப்பாள். அவளை மணம் புரிந்து சுகமாய் வாழ்ந்துகொண்டிரு" என்று உத்தரவு கொடுத்தனுப்பினுள்.

10. இப்பொழுது விஜயன் ஒருவராலும் சாதிக்கப்படாத அரிய பெரிய வேலையைத் தான் செய்து முடித்து வெற்றிகொண்டமையால், அளவு கடந்து

களிப்படைந்து இறுமாந்துவிட்டான். மாதுளை கன்னிகையென்கிற தெய்வப் பெண்ணை மணம்புரியும் பாக்கியம் தனக்கு வந்து விட்டதென்னும் மகிழ்ச்சியொருபுறம், தாய் தந்தையர்கள் தன்னைக் காணமையால் வருந்துவார்களே யென்கிற விசனம் ஒரு புறம் இவ்விதமாய் இலக்ஷ்மணபுரியை வந்தடைந்தான்.

11. அவ்வூரிலுள்ள வீடுகள் மிகச்சிறியனவாயும் திண்ணைகள் ஒரு மனிதன் கூடப் படுக்க முடியாதனவாயுமிருந்தன. ஊரிலுள்ள பெண்களெல்லாரும் கண்ணுக்கின்பமான அழகிய மங்கள விக்கிரகசொரூபமாக இருந்தாலும் ஒருவராவது நல்ல ஆடையா பரணதிகள் அணியாமல் அழுக்குப்படிந்த துணிகளையுடுத்துக்கொண்டு திரிவதையும், ஒருவராவது செப்பு, பித்தளையிற் செய்த பாத்திரங்களெட்டாமலும், அவலட்சணமாய்ச் செய்துள்ள மரப்பாத்திரங்களையும், மண் பாத்திரங்களையு மெடுத்துக்கொண்டு தண்ணீர்திரட்ட வருகிறதையும் பார்த்து, அளவில்லாத பிரஜைகள் குடியேறி யிருக்கிற இந்தப் பட்டணத்தில் குடிகளும் வீடுகளும் இப்படி யிருக்கக் காரண மென்னவோ தெரியவில்லை; அதைப்பற்றி நாம் விசாரிப்பானேன். இன்றிராப்பொழுதை இங்கே கழித்துவிட்டுக் காலையிலெழுந்திருந்து போய்விடுவோம்'' என்றெண்ணிப் படுக்கத்தக்க இடந் தேடிக்கொண்டு வந்தான். ஒவ்வொருதிண்ணையுமப்படியே படுக்கப் பயன்படாமலிருந்தது. கடைசியாகக் கிராமாதிகாரி வீடுவந்து சேர்ந்தான். இதில் தங்கக் கூடாதென்ற கட்டளையிருக்கிறபடியால் நாமிதிற் படுக்கக்கூடாதென்று, அதைவிட்டு அப்புறம் போனான். ஓடுபோட்ட வீடு ஒன்று இருந்தது. அதன் திண்ணை படுக்கத்தக்க

விசாலமும் அழகும் அமைந்திருந்தது. அதைக்கண்டவுடன் மகிழ்ந்து அந்தத் திண்ணையின் மேல் அவன் உட்கார்ந்து கொண்டான்; அப்பொழுது அஸ்தமிக்க நாலுநாழிகைப் போதிருக்குமென்று சூரியனால் தெரிந்து கொண்டான்; களைப்பாக இருந்தபடியால் சற்றுப் படுத்துக்கொண்டு தூங்காமல் விழித்திருப்போமென்று கருதிக் கீழே தலையை வைத்துப் படுத்தான்; நடந்துவந்த களைப்பினால் கொஞ்சம் அயர்ந்து தூங்கிவிட்டான்.

12. பசி மிகுதியால் பின்பவன், ஒரு நாழிகைக்குள் விழித்துக்கொண்டு பார்த்தான்; தனக்கு எதிரில் பூதம்போல் ஒரு பெரிய பெண் சொரூபம் நிற்கக் கண்டான்; பெரிய தோசைக்கல்லைப்போல் வட்டமாய் விசாலித்திருக்கும் முகமும், வண்டுபோல் வட்டமாய்ச் சிறுத்த கண்களும், காட்டு ஒணானைப் போலக் கருத்துப் பருத்து நீண்டு திரண்ட மூக்கும், மரத்தட்டையொத்த காதுகளும், மாரளவு நீண்ட மோவாய்க்கட்டையும், மரப்பொந்தைப் போன்ற வாயும், நாய்க்கொடை போல் நீண்டகன்ற பற்களும், மொந்தம் வாழைக்காயைப் போலப் பருத்து நீண்டு தொங்குகிற உதடுகளும், குதிரைப் போலக் கால் முதல் கழுத்தளவும் ஒரே அளவாய்ப் பருத்து மடிப்பு மடிப்பாய்ச் சதை தொங்கி யசைந்து தள்ளாடுகிற கருத்த உடலும், உரலைப்போல அளவொத்த காலும், முச்சில் என்கிற சிறு முறம்போலப் பரந்து நீண்ட பாதமும், கருங்கல் தூண்போலப் பருத்துக் குறுகின கைகளு முடையவளாய் நிற்கிற அவளைப் பார்த்துத் திடுக்கிட்டுச் சற்று மனங்கலங்கிப் பின்பு தெளிந்து தைரியம் குலையாமல் தலைகுனிந்திருந்தான்.

13. இந்த அழகிய மாது பொந்துபோன்ற தன் வாயைத் திறந்து அண்டங் காக்கையைப் போலக் குரலைக்காட்டி "நீர் எந்தவூர்?" என்றாள். அவன் பயந்து "நான் பரதேசி; எனக்கு ஊரென்று ஒன்றுமில்லை" என்றான். அவன் பேச்சைக் கேட்ட வுடன் கொஞ்சம் நாணிச் சதை குலுங்கச் சற்றசைந்து, முகத்தைப் பக்கமாகத் திருப்பிக்கொண்டு "ராத்திரி இங்கேயே சாப்பிடலாம்" என்று சொல்லி விட்டு மதயானையைப் போல நடந்து உள்ளே போனாள்.

14. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் உள்ளேயிருந்து மற்றொரு அழகிய பெண் வந்து விஜயனைப் பார்த்து, "ஐயா! எங்கள் எஜமானி தங்களை உள்ளே அழைத்துக்கொண்டு வரச் சொன்னாள். தயவு செய்து உள்ளே வாருங்கள்" என்றாள். "அம்மா! இது யாருடைய வீடு? சற்று முன்னால் இங்கே வந்த பெண்யார்?" என்று கேட்டான். இந்தப் பணி விடைப் பெண் "ஐயா! இது இவ்வூரை யாளும் அதிகாரியினுடைய வீடு. முன்னே வந்த பெண் அவருடைய மூத்ததாரத்திற்குப் பிறந்த புத்திரி. அவள் தான் எங்களுக்கு எஜமானி" என்றாள். "அப்படியானால் சரி; இன்னமொரு சங்கதி கேட்கிறேன், அதையும் சொல்லவேண்டும்" என்றான். இவள் "ஐயா! தெரிந்தால் சொல்லுகிறேன்" என்று சொன்னாள். இந்த ஊரிலுள்ள வீடுகள் எல்லாம் அவலக்ஷணமா யிருக்கின்றனவே, அதற்கென்ன காரணம்? பித்தளை வெண்கலப் பாத்திரங்களே கிடையாவே, அதேனப்படி யிருக்கிறது? சொல்ல வேண்டும்" என்று கேட்டான்.

15. அப்பெண் கூறுகிறாள் — இவ்வூர் இறைவனுடைய மூத்த தாரம் வெகு ரூபலாவண்ணியமும் சிறந்த சற்குணமும் உள்ளவள். ஏதோ விதிவசத்தால் அவளை ஒரு பிசாசு பிடித்துக்கொண்டது. எவ்வகையிலும் அது போகவில்லை. அந்தக் காலத்தில் அவள் இந்தப் பெண்ணைப் பெற்றாள். இந்தப் பெண் பிறந்த ஆறு மாதத்துக்கெல்லாம் தாயார் இறந்து போனாள். அவள் சாகுந் தருணத்தில் கணவனையழைத்து அவரை ஒருவரம் கேட்டாள். அதாவது என்னவென்றால் 'எனக்குப் பிறந்தபெண் கண்ணுக்கு அழகாயில்லை. விகாரரூபமாக இருக்கின்றாள். இந்தக் குழந்தைக்கு ஒரு கெடுதி வராமலும் அதன் மனதுக்கு வருத்தமொன்றும் வராமலுங் காப்பாற்ற வேண்டும். இதுதான் நான் கேட்கிற வரம். இந்த வரங்கொடுத்தால் ஒரு கவலையுமில்லாமல் சந்தோஷமாய்ப் பரலோகம் போவேன்' என்றாள். இவருக்கு அந்த அம்மாளிடத்திலிருந்த பிரியத்தினால் அப்படியே ஸத்தியஞ் செய்து கொடுத்து விட்டார். அந்த அம்மாளும் மனத் திருப்தியோடு மரித்துப் போனாள்.

16. இந்தக் குழந்தை வளர்ந்து வந்தது; வளரும் போதே பொறாமையும் எரிச்சலும் பொய் பித்தலாட்டங்களோடும் வளர்ந்தது. தக்க வயது வந்த பின் சற்றுச் சுகமாயிருப்பவரைக் கண்டால் இவள் பொறாமை கொள்வாள். ஒருவரும் தன் ஸ்திதியிலிருக்கப் படாதென்பதும் தன் கண்முன்னால் சுகமாய் வாழப் படாதென்பதும் இவளுடைய அபிப்பிராயம். இதைக் கண்டு இவள் தந்தை வெகு வருத்தப்பட்டுத் தமது குருவினிடத்தில் இதற்கென்ன செய்வதென்று யோசனை கேட்டார். அவர் 'இந்தப்

பெண் இருபத்தோராவது வயதில் மரித்துப்போம்; அப்பொழுது ஓர் இராஜகுமாரன் மாதுள கன்னிகையை எடுத்துக்கொண்டு இங்கே வருவான். அவனால் இவளுக்கு மரணம் நேரிடும். அது வரைக்கும் பொறுமையாக இருக்கவேண்டும்' என்று சொன்னார். அதனால் அரசர் அந்தக் காலத்தை எதிர் பார்த்துக்கொண்டு சும்மா விருக்கிறார். இவளுக்கு இப்பொழுது பதினெட்டாவது வயது நடக்கிறது. இவளுடைய திருப்திக்காகவே நல்ல வீடு கட்டப்படாதென்றும், ஒருவரும் உயர்ந்த ஆடையாபரணங்களணியப்படாதென்றும் மரம் மண்ணால் செய்த பாத்திரங்களையே எல்லாரும் உபயோகப்படுத்த வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்தார். இது தான் காரணம் — என்றாள்.

17. விஜயன் அப்படியாவென்று அதிசயித்துச் சும்மா இருந்தான். இப்படியிருக்கையில் மற்றொரு பெண் வந்து "என் உள்ளே வரக்கூடாதா? எங்கள் எஜமானி தமது வருகைக்கு எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறாளே" என்று சொல்லி அவனையும் அழைத்துக்கொண்டு உள்ளே போனாள். விஜயன் பயத்தோடு உள்ளே நுழைந்து எஜமானி இருக்கும் இடம்போனான். அவள் வெகு வணக்கமா யெழுந்து நின்று கொண்டு அவனுக்குப் போஜனமிடக் கட்டளையிட்டாள். பணிவிடைப்பெண்கள் போஜனமிட, அவன் சாப்பிட்டபின், ஜோடித்து அலங்காரமாயிருந்த ஒரு பள்ளியறையைக் காட்டி அங்கிருந்த கட்டிலின்மேற் படுக்கச் சொன்னார்கள். பசியால் களைத்திருந்த விஜயன் கட்டிலின்மேற் படுத்ததும் தன்னை மறந்து நித்திரை போய் விட்டான்.

19, அவன் அப்புறம் இப்புறந் திரும்பும்போது அவனுடைய மடியிலிருந்த மாதுளம்பழம் கீழே விழுந்து உடைந்து போயிற்று. அதற்குள்ளிருந்த தெய்வப்பெண் குழந்தை வடிவமாக விளையாடிக் கொண்டிருந்தது. அச்சமயத்தில் கிராமாதிகாரியின் புத்திரி உள்ளே வந்து புகுந்து விளையாடிக் கொண்டிருக்கிற குழந்தையைக் கண்டு வயிறெரிந்து, அதைக் கையிலெடுத்துக் கழுத்தை முறித்தாள். அப்பொழுது அது வீறிட்டு அழ விஜயன் தனக்கு நேரிட்ட விபத்தைக் குறித்து மனம் வருந்தப் பதைபதைத்து எழுந்தோடி வந்து அவள் கையைப் பிடித்தான். அந்தப் பெண் "இப்பொழுது என் கையை விடு; இல்லாவிட்டால் உனக்கு மரணதண்டனை விதிப்பேன்" என்றாள். அவன் பயந்து நடுங்கி நின்றான். அந்தப் பாதகி குழந்தையைக் கொன்று வாசலில் குழியை வெட்டி அதில் போட்டுப் புதைத்து விட்டாள். விஜயன் மனம் வருந்தி ஒன்றுந் தோன்றாமல் திகைத்து நின்று, அவளுக்குத் தெரியாமல் வெளியி லோடிப் போய் விட்டான்.

20. அப்பால் அவனுடைய சித்தம் மயங்கிப் பைத்தியம் பிடித்தவன் போல் ஊரூராய் அலைந்து கொண்டிருந்தான். அந்தக் குழந்தையைப் புதைத்த இடத்தில் ஒரு மாதுளங்கன்று முளைத்துப் பெருத்து வளர்ந்து தழைத்தது. ஒரு நாள் கிராமாதிகாரியின் பெண் அந்த விருக்ஷத்தைப் பார்த்து உடனே ஒரு வேலைக்காரனை விட்டு அந்த மரத்தை அடிவேரோடு பறித்தெடுக்கச் சொன்னாள். அவன் வெட்டி யெடுக்கும்போது அம்மரத்தின் அடி வேரில் ஒரு பெரிய மாதுளங்கனி யிருந்தது. அவன் அதை யெடுத்து

ஒருவரும் அறியாமல் மடியில் வைத்து மறைத்துக் கட்டிக் கொண்டு வேலை முடிந்தபின் வீடு போய் அந்தப் பழத்தைத் தன் மனைவி கையில் கொடுத்தான். அவள் அதை ஆவலோடு வாங்கி உடைக்க, அதற்குள் ஓர் அழகிய பெண் இருந்தது. அதைப் பார்த்து இருவரும் ஆச்சரியப்பட்டு அவர்களுக்குக் குழந்தை யில்லாமையால், தெய்வந்தான் இந்தக் குழந்தையைக் கொடுத்ததென்று மகிழ்ந்து வளர்த்தார்கள்.

21. இந்தக் குழந்தைக்கு வயது மூன்றாயிற்று. குசவன் வீட்டுக் குண்டாம் புழுக்கை என்று எல்லாராலும் இகழ்ந்து கூறப்பட்ட அதிகாரியின் மகள் வேலைக்காரியை அழைப்பதற்காக ஒருநாள் அந்த வீட்டுக்கு வந்தாள். அப்போது வேலைக்காரி தங்களுக்குத் தெய்வானுக் கிரகத்தால் கிடைத்த அருமையான குழந்தையோடு கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தாள். குண்டாம்புழுக்கை அந்தக் குழந்தையைப் பார்த்து 'இது உனக்கு எப்படி வந்தது சொல்?' என்றாள். அவள் பயந்து நடந்த விருத்தாந்தத்தைச் சொல்ல, உடனே அவள் தலை மயிரைப் பிடித்திழுத்துக் கீழே தள்ளி உதைத்து; "எனக்குச்சொல்லாமல் என் மரத்திலிருந்த பழத்தை யெப்படி நீ யெடுத்தாய்?" என்று வைது அக்குழந்தையைத் தூக்கிக்கொண்டு அடுத்த ஒரு மைதானத்துக்குப் போய், குழந்தையைக் கொன்று இரண்டு கண், இரண்டு கால்கள், இரண்டு கைகள், தலை காது முதலிய உறுப்புக்களைத் தனித்தனியாகப் பிரித்தெறிந்து நாய் நரிகளுக்கு இரையாகும்படி போட்டு விட்டுப் போய் விட்டாள்.

22 அந்தக் குழந்தையின் இரண்டு கண்களும் இரண்டு மயில்களாயின. இருகாதுகள் இரண்டு குயில்களாயின. கைகளிரண்டும் தென்னை மரங்களாயின. கால்கள் பனைமரங்களாயின. உடல் பெரிய குளமாயிற்று. தலை அழகிய மண்டபமாயிற்று. தலைமயிர்கள் தோப்பாயின. இப்பொழுது குண்டாம்புழுக்கைக்கு வயது இருபத்தொன்று. விஜயனுக்கு வயது இருபத்து நான்கு.

23. விஜயன் பைத்தியம் பிடித்தவனைப் போலத் திரிந்து கொண்டிருக்கையில் ஒரு நாள் அந்தப் புதிய தோப்பின் அருகே வந்தான். அதைப் பார்த்ததும் அவன் மனமுருகிமகிழ்ந்தது. களிப்புத்தோன்றியது. ஆனந்தம் பெருகியது. விஜயன் சற்று யோசித்து "இது என்ன புதுமை; என்னை யறியாமல் எனக்கு மகிழ்ச்சியுண்டாகிறது. ஆனந்தம் தோன்றுகிறது. இந்தத் தோப்புக்குள் ஏதோ விசேஷமிருக்கிறது; அதையறிவோம்" என்று கருதி உள்ளே புகுந்து பார்த்தான்.

24. அந்தத் தோப்பிலுள்ள குளம் மண்டபம் விருக்ஷம் முதலியவற்றின் அழகைப் பார்க்கப் பார்க்க ஆனந்தம் அதிகரித்தது. அங்கிருந்த மண்டபத்தில் உட்கார்ந்தான். அப்பொழுது அவன் காதுகளுக்கினிமையாகக் குயில்கள் கூவின; நேத்திரானந்தம் உண்டாகும்படி மயில்கள் தோகையை விரித்தாடின. மரங்கள் புதிய மலர்களை அவன்மேல் சொரிந்தன. அப்பொழுது இந்த வைபவங்களைக்கண்டு மகிழ்ந்த விஜயன் 'ஐயோ! நமது மனைவி உயிரோடிருந்தாளானல் இந்தச் சோலையில் என்னோடு விளையாடிக் கொண்டிருப்பாளே! அவளோடு விளையாடிக் கொண்

டிருந்தால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்! கொடுத் துவையாத பாவியாய் விட்டேனே! காளியம்மன் இட்ட கட்டளை கடந்து கிராமாதிகாரி வீட்டில் தங் கினதினுலே யல்லவா இந்த ஆபத்து வந்தது. இனி என்ன செய்கிறது. ஆ! மாகாளி! பரமேசுவரி! சர்வேசுவரீ! கருணாமூர்த்தி! என் தாயே! இந்தச் சமயத்தில் என்னைக் காப்பாற்றியருள். என் தப்பி தத்தைப் பொறுத்து என்னை ரக்ஷித்தருள்' என்று பிரார்த்தித்தான்.

25. அப்போது குயில்களும் மயில்களும் அவன் சமீபத்தில் வந்தன. குயில்கள் அவனுடைய இரண்டு தோள்களிலும் உட்கார்ந்தன. மயில்கள் மடியில் உட் கார்ந்தன. குயில்கள் வாய்திறந்து "ஓ இராஜ குமாரா! நாங்கள் மாதுளகன்னிகை. உனக்கு மனைவி வேண்டுமானல் இந்தப் பனைமரம் தென்னை மரங்களை வெட்டிக் குளத்தில் போடு! மண்டபத்தை யிடித்து அதனுல் குளத்தைத் தூர்த்துவிடு! நாங்கள் குளத்துக்கு நேராகப் பறந்து வரும்போது எங்களை உன் அம்பால் அடித்துக் குளத்தில் வீழ்த்து!" என்று சொல்ல அவன் அப்படியே செய்தான். குயிலும் மயிலும் குளத்துக்கு வரும்போது அவைகளை அம் புகளாலெய்து குளத்தில் வீழ்த்தினுன்.

26. அந்தக் குளத்திலிருந்து ஒரு மங்கைப் பருவப்பெண் தோன்றினுள். அவளுடைய தேககாந்தி யால் கண்ணொளி மழுங்கும்போ லிருந்தது. அவ ளுடைய அழகைக்கண்டு தேவர்களும் மதிமயங்கும் படியிருந்தது. அந்தப் பெண் முகமலர்ந்து ஸந் தோஷமாக அன்னம்போல நடந்து வந்து விஜயனைத் தழுவி ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு "என் பிராண

நாதா! நான் ஒரு தெய்வப்பெண். அந்தக்குண்டாம் புழுக்கை ஒரு இராக்ஷஸி. இருவருக்கும் தீராப்பகை யுண்டாயிற்று. நீ முன் ஜன்மத்தில் ஒரு தேவனா யிருந்தாய். நாங்களிருவரும் விதிவசத்தால் உனக்கு மனைவியானோம். நாங்களிருவரும் எப்பொழுதும் சண்டையிட்டுக்கொண் டிருப்பதைச் சகியாமல் நீ தற்கொலை செய்துகொண்டாய்; அதைக் கேட்ட என் தகப்பன் கோபித்து என்னை மாதுளமரமாம்படிக்கும் அவளை மனுஷியாகும் படிக்கும் சபித்து, அவ்வூரையும் அதிலுள்ள குடிகளையும் மாதுள வனமாம்படி சொல்லிவிட்டு, என்னைப் பார்த்து 'நீ உன் கணவனுக்கு மனவருத்த முண்டாகும்படி செய்தபடியால் படாத பாடுபடுவாய்; உன் கணவன் பூலோகத்தில் அரசகுமாரனாகப் பிறந்து உன்னை மணம் புரிவான். உன்னை மணம் புரிந்த அப்பொழுதே இந்த அரக்கி மடிந்துபோவாள். பின் நீ உன் கணவனோடு இந்த இராஜ்யத்தை ஆண்டுகொண்டு சுகமாக வாழ்வாய்' என்றுகூறிப் போய்விட்டான். நீ தற்கொலை செய்துகொண்ட பாபத்தினாலேதான் இதுவரையும் கஷ்டப்பட நேரிட்டது. இனி யாதொரு குறைவுமில்லை" என்று சொல்லிக் கண்களை மூடிக்கொண்டு காளியம்மனைத் தியானித்தாள்.

உடனே காளியம்மன் தன் பரிவாரத்தோடு வந்து அவ்விருவரையும் ஆசீர்வதித்து, அவ்விருவருக்கும் மணம்புரிவித்தாள். மாதுள வனமும் இந்திரஜாலம் போல நகரமாய் விளங்கியது. குடிகளெல்லாரும் வந்து பணிந்து கொண்டார்கள். இராஜகுமாரன் உலக முழுமையும் ஜயித்து விஜய வேந்த

னைத் தன்பெற்றோரையும் அழைப்பித்துக்கொண்டு மாதுளை கன்னியுடன் சுகமாக வாழ்ந்து வந்தான்.

மாதுளகன்னிகதை முற்றிற்று.

---

## இரண்டாவது

## நான்கு இராஜ குமாரத்திகளின் கதை.

---

அளகாபுரி என்னும் நகரத்தில் அளகேசன் என்னும் இராஜன் வெகு நீதியாய் அரசு புரிந்து வந்தான். இவனுக்குச் சகல பாக்கியங்களும் இருந்தும் புத்திர பாக்கியம் மாத்திர மில்லாமல் மற்றொரு பெண்ணை விவாகம் புரிந்தான். அரசன் அவளிஷ்டப்படியே நடந்து வந்தான். மறுவருஷத்தில் அவள் ஒரு பெண்ணைப் பெற்றாள். அரசன் அந்தப்பெண் குழந்தைக்கு ஜாதகர்மாதிகள் செய்து, அதை வெகு அருமையாக வளர்த்து வந்தான். அவனுக்கு வேறு புருஷ ஸந்ததி இல்லாமையால் இந்தப்பெண்ணுக்குச் சிங்காசனம் உரியதென்று கூறி வந்தான். இதனால் இளைய மனைவி இறுமாந்து தன் சகளத்தியை அலக்ஷியம்பண்ணி மிக இழிவுபடுத்தி வந்தாள். மூத்த மனைவி அவள் செய்யும் அவமானத்தைச் சகிக்க மாட்டாமல் தெய்வத்தினிடத்தில் முறையிட்டு வந்தாள். தெய்வம் அவள் முறைக்கு இரங்கி அநுக்கிரகம் செய்தது. அவளும் தெய்வாநுக்கிரகத்தினால் நல்ல சுப முகூர்த்தத்தில் ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தாள்.

அது கேட்ட அரசன் அளவு கடந்த மகிழ்ச்சி யடைந்து, அதற்குச் செய்யவேண்டிய கர்மங்களையும் செய்து இரவும் பகலும் மூத்தவள் வீட்டிலேயே இருந்தான். இதனுல் இளையாள் மூத்தவளையும் அவளது புத்திரனையும் வெறுத்துப் பகைத்து வந்தாள். அவளுடைய பெண்குழந்தைக்கு விவாகப் பருவமாகிய மங்கைப்பருவம் வந்துவிட்டபடியால், அரசன் தான் உத்தேசித்தபடியே அந்தப் பெண்ணை மந்திரி மகனுக்கு விவாகஞ் செய்து கொடுத்துவிட்டான்.

பிள்ளைக்குப் பதினெட்டாவது வயது பிறந்தது. ஒருநாள் அவன் ஊருக்கு வடக்கிலிருக்கும் காளி கோவிலுக்குப் போய் அம்மனைத் தரிசித்து ஸ்தோத்திரம் பண்ணினன். அம்மன் அவனுக்குப் பிரத்தியக்ஷமாய் "அப்பா குழந்தாய்! உன் தாய் என்னை நோக்கி முறையிட்டபடியால் என்னுடைய கருணையால் நீ பிறந்தாய். உன் இளையதாயாரும், அவளுடைய புத்ரியாகிய உன் தமக்கையும் எப்படியாவது உன்னைக் கொலைசெய்துவிட்டு உன்னுடைய கிரீடத்தை அபகரிக்க எண்ணியிருக்கிருர்கள். நீ ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்" என்று சொன்னுள். அரச குமாரன் "அம்மா எனக்கு என்ன தெரியும்; நான் ஜாக்கிரதையா யிருப்பதினுலென்ன பிரயோஜனமிருக்கிறது? நீயே உன் கருணையால் என்னைக் காத்தருளவேண்டும்" என்று பணிந்து பிரார்த்தித்தான். அம்மன் அவனிடத்தில் கருணைகூர்ந்து, அவனைத் தன் அருகில் அழைத்துப் பாதாதி கேச பரியந்தம் தன் கையால் தடவிக்கொடுத்து "நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நான் முன்னே நின்று உன்னைக்

காப்பாற்றுகிறேன்" என்று சொல்லி அவனுக்கு மாகாளன் என்று பேருமிட்டுத் திருநீறளித்து அனுப்பினாள்.

அன்று முதல் அவனுக்கு மாகாளராஜன் என்று பெயர் வழங்கி வந்தது. அளகேசன் தன் புத்திரனுக்குச் சரியான பருவம் வந்து விட்டபடியால் அவனுக்கு மகுடாபிஷேகம் செய்ய உத்தேசித்தான். அது இளைய தாயாருக்கு எவ்வாறோ தெரிந்து விட்டது. அவள் மந்திர தந்திரங்களில் வல்லவள். ஆதலால் அவனை யெப்படியாவது கொல்லத் தீர்மானித்துத் தனக்குத் தீராத தலைநோய் உண்டாயிற்றென்று படுத்துக்கொண்டு புரண்டு புரண்டு அழுதாள். தாதிகள் இந்தச் சமாசாரத்தை அரசனுக் கறிவித்தார்கள். அரசன் ஓடிவந்து பார்த்து அரண்மனை வைத்தியர்களை அழைத்து வைத்தியம் பண்ணக் கட்டளையிட்டான். அது எந்த வைத்தியத்தினாலும் தீரவில்லை. அவளுடைய் போதனைக் குட்பட்ட ஒரு வைத்தியன் "ஐயா! ஒரு கலம் புலிப்பால் கொண்டு வந்தால் இந்த வியாதி உடனே நீங்கி விடும்" என்றான். அரசன் திடுக்கிட்டு இதற்கென்னசெய்கிறது. யார் கொண்டு வருவார்கள் என்று யோசித்து ஒவ்வொருவரையும் விசாரிக்க எல்லாரும் தங்களால் ஆகாதென்று கூறி மறுத்து விட்டார்கள். இளைய தாயார் மாகாளனை யழைத்து "அப்பா! நீ மஹா வீரனயிற்றே! புலிப்பால் கொண்டுவர உன்னலாகாதோ? உன்னல் முடியாத காரியமும் உண்டோ? அவசியம் நீயே கொண்டுவந்து என் துன்பத்தை நிவிர்த்தி செய்ய வேண்டும்" என்று சொன்னாள். அவளுடைய வஞ்சனையை யறிந்த மாகாளன்

"அம்மணீ, அப்படியே கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அரசனிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு மறுநாள் காலையில் புறப்பட்டுப் போனன். அவன் காளிகோவிலுக்குப் போய் அம்மனைப் பணிந்து கொண்டு கோவிலை வலமாகப் பிரதக்ஷணம் செய்து போய், நெடுந்தூரம் நடந்து மத்தியானம் இருபது நாழிகை யளவில் புலிவனம் போய்ச் சேர்ந்தான்.

அவ்விடத்தில் யாதொரு ஜீவ ஜந்துக்களுமில்லை. இரண்டு சிறிய புலிக்குட்டிகள் மாத்திரம் வெய்யிலில் கிடந்து தவித்துக் கொண்டிருந்தன. அரச குமாரன் அவற்றைக் கண்டு மனமிரங்கி அவைகளைத் தூக்கிக் கொண்டுபோய் ஒரு மரத்தின் நிழலில் படுக்கவைத்து பக்கத்திலிருந்த ஒரு குட்டையிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து அவற்றிற்கு ஊட்டினன். அதனல் அவைகள் களைதெளிந்து அரசகுமாரனைப் பார்த்து "ஐயா! நீர் யார்? என்னத்திற்காக இங்கே வந்தீர்?" என்று கேட்டன. அரச குமாரன், தான் வந்த காரியத்தைத் தெரிவித்தான். புலிக்குட்டிகள் "ஐயா நாங்கள் இக்காட்டு அரசனகிய புலி ராஜனுடைய குழந்தைகள். எங்களுடைய தாயும் தகப்பனும் இரைதேடப்போயிருக்கிறர்கள். அவர்கள்வந்ததும் நாங்கள் உமது இஷ்டம்போல நடந்து கொள்கிறேம். இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர்கள் வந்து விடுவார்கள். நீர் இங்கேயிருக்க வேண்டாம். அதோ இருக்கிற புதரில் மறைந்து கொண்டிரும்" என்று சொல்லி யனுப்பின.

அவன் அப்படியே மறைந்து கொண்டிருந்தான். சூரியன் மலை வாயில் விழுகிற சமயத்தில் பெரிய புலிக

விரண்டும் வந்தன. தங்களுடைய குழந்தைகள் வழக்கம்போல் எதிர்கொண்டு வராமையால் ஆச்சர்யப்பட்டுக் "குட்டிகளே! இன்றைக்கு ஏன் நீங்கள் எங்களுக்கு எதிர்கொண்டு வரவில்லை? உங்களுக்கென்ன குறை?" என்று கேட்க, அவைகள் "எங்களைப்பற்றி உங்களுக்காக வேண்டுவதென்ன? எங்கள்உடம்பைப் பாருங்கள்; கொப்புளங்கள் புறப்பட்டிருக்கின்றன. ஏதோ தெய்வ சகாயத்தால் பிழைத்தோம். அந்தத் தெய்வம் எப்போதும் காப்பாற்றும்" என்றன. அதைக் கேட்ட புலிகள் மனம் வருந்தி "என்ன ஆபத்து நேரிட்டது?" என்றன. "நாங்கள் விளையாடிக் கொண்டிருக்கையில் வெய்யிலில் சற்று தூரம் போய் விட்டோம். உஷ்ணந் தாங்காமல் திரும்பிவர முயன்றோம்; முடியாமையால் அங்கேயே விழுந்து விட்டோம். இன்னும் கொஞ்சநேரமிருந்தால் செத்துப்போ யிருப்போம்" என்றன. புலிகள் மனஸ்தாபப்பட்டு "எப்படித் தப்பிப் பிழைத்தீர்கள்?" என "அதைச் சொல்ல எங்களுக்குப் பிரியமில்லை" என்றன. புலிகள் குட்டிகளைத் தழுவிக்கொண்டு, முத்தமிட்டு "எங்களுக்குச் சொல்லக் கூடாத இரகசியமென்ன?" எனக் குட்டிகள் "எங்கள் உபகாரிக்கு யாதொரு தீங்கும் செய்வதில்லை யென்றும் எங்கள் இஷ்டப்படி நடக்கிறோம் என்றும் ஸத்தியம் பண்ணித் தந்தால் சொல்வோம்" என்றன. அப்படியே ஸத்தியம் செய்து தந்தவுடன் உண்மையைத் தெரிவித்து "எங்கள் உபகாரி நாடி வந்தபடி கலைப் புலிப்பால் கொடுக்க வேண்டும்" என, புலிகள் "அப்படியே தருகிறோம்; அந்த மனிதனை இங்கே அழைத்து வாருங்கள்" என்றன. அவைகள் ஓட்ட

மாய் ஓடிவந்து மாகாளனை அழைத்துக்கொண்டு வந்து விட்டன.

புலிகள் அவனுக்கு உபசாரஞ் சொல்லி, ஆகாரங் கொடுத்துப் படுக்கச் சொல்லி, விடிந்தவுடன், நூறு பெண்புலிகளை அவன்கூட அனுப்பி "இந்தப் புலிகளை அழைத்துக்கொண்டுபோய் உனக்கு வேண்டிய அளவு பாலைக்கறந்துகொண்டு பின் அனுப்பிவிடு" எனத் திட்டஞ்செய்தனுப்பின. அவன் அவைகளை அழைத்துக்கொண்டு தன் ஊர்வந்து சேர்ந்தான். அவனையும் புலியையும் பார்த்து நகரத்தார் கலங்கி நடுங்கினார்கள். இளைய தாயாருக்கு அந்தப் பயத்தினால் தலைவலி தீர்ந்து போயிற்று. புலிகளும் காடு போய்ச் சேர்ந்தன.

சிலநாள் சென்றபின் மறுபடியும் இளைய தாயார் தலைநோய் முதலிய வியாதிகள் உண்டாயினவென்று படுத்துக்கொண்டு கோவென்று புரண்டு புரண்டு அழுதாள். வைத்தியர்கள் எல்லாரும் தங்களாலாகாதென்று கைவிட்டு விட்டார்கள். முன்போலவே ஒரு வைத்தியன் அவளுடைய போதனையைக் கேட்டு "விந்தியமலைக்குகையில் ஓர் இராக்ஷஸி வசிக்கிறாள். அவள் ஒரு மை வைத்திருக்கிறாள்; அந்த மை வருமானால் இந்த வியாதி நீங்கிப்போய் விடுவதுமன்றி இனி மேல் வியாதி வரவே வராது. அன்றியும் அந்த மை இருக்கிற நாட்டிலும் வியாதி வராது" என்று கூறினான். அது கேட்ட அரசன் "இதற்கு என்ன செய்கிறது? யார் போய் அதைக் கொண்டு வருவார்கள்? எவனாவது போகத் துணிந்தாலும் அந்த இராக்ஷஸியை வெல்வதெப்படி?" என்று கவலை கொண்டு வருந்தினான். அப்போது இளையதாயாரும்

வைத்தியரும் அரசனை நோக்கி "மஹாராஜாவே! உமக்கு ஏன் இந்தக்கவலை? உமது குமாரன் இருக்கிறானே அவனுடைய சாமர்த்தியம் உமக்குத் தெரியாது. அவன் மனம் வைத்தால் இந்த ஓர் இராக்ஷஸியே அல்ல இன்னம் எத்தனை கோடி பேர்கள் போருக்கு வந்தாலும் வென்று வருவான். அவனை அனுப்பினால் காரியசித்தியாம்" என்றார்கள். அரசன் ஒன்றுஞ் சொல்லாமல் புத்திமயங்கிச் "சிறிய குழந்தையை அனுப்பவாவது; பெருமோசமாயிருக்கிறது. இளையாளுடைய தந்திரம் இது" என்று தெரிந்து கொண்டு சும்மா இருந்தான். அப்போது பக்கத்திலிருந்து இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த அரசகுமாரன் எழுந்திருந்து பிதாவை வணங்கி "தாங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்; நான் போய் வருகிறேன்" என்று சொல்லி உடனே பிரயாணப்பட்டுப் போய்விட்டான்; இரவும் பகலுமாக நடந்து விந்திய பர்வதத்துக்கு நூறுயோசனை தூரத்துக்குச் சமீபமாக வந்து சேர்ந்தான். அங்கே உறிஞ்சுராஜன் என்ற அரசன் அரசாட்சி செலுத்திக் கொண்டிருந்தான். அந்த நகரத்தில் அவன் ஒரு சத்திரத்தில் இறங்கி "இவ்வூரில் என்னவிசேஷம்?" என்று விசாரிக்க, "இவ்வூர் இராஜ குமாரத்தியை ஒரு மாதத்துக்கு முன் ஓர் இராக்ஷஸி தூக்கிக்கொண்டு போய்விட்டாள். அவளை யார் கொண்டு வருகிறானோ அவனுக்குத் தன் பெண்ணையும், பாதி ராஜ்யத்தையும் தருவதாக அரசன் பறையடித்துத் தெரிவித்திருக்கின்றான். இது தான் விசேஷம்" என்று சொல்லக்கேட்டு மகிழ்ந்து, மறுநாள் உதயமானதும் எழுந்திருந்து பிரயாணப்பட்டுப் போய், இருபது யோசனை தூரத்தி

லிருக்கிற பெருக்கு ராஜன் பட்டணத்தை யடைந்து ஒரு சத்திரத்தில் தங்கினன். அவ்விடத்துள்ளவர்களை "இவ்வூரில் என்ன விசேஷம்" என்று கேட்டான். அவர்கள், "இந்த ஊர் இராஜ குமாரத்தியை விந்திய மலையில் வசிக்கிற ஓர் இராக்ஷஸி கொண்டுபோய் விட்டாள். அந்தப்பெண்ணை யார்மீட்டுக்கொண்டு வருகிறனோ அவனுக்கு அந்தப் பெண்ணையும் பாதி இராஜ்யத்தையும் தருவதாக அரசன் பறை சாற்றித் தெரிவித்திருக்கிறன். இதுதான் விசேஷம்?" என்றார்கள். மறுநாளுதயத்தி லெழுந்திருந்து புறப்பட்டு இருபது யோசனை தூரங்கடந்து போருக்கு ராஜன் பட்டணம் போய் ஒரு சத்திரத்தில் தங்கினன். அங்குள்ளவர்களை "இவ்வூரில் என்ன விசேஷம்" என்று கேட்க, அவர்கள் "ஐயா! இவ்வூர் அரசன் குமாரத்தியை விந்தியமலை அரக்கி தூக்கிக்கொண்டு போய்விட்டாள். அவளை மீட்டு வருகிறவனுக்கு, அந்தப் பெண்ணையும் பாதி இராஜ்யத்தையும் தருகிறதாக அரசன் பறை யடித்திருக்கிறன்" என்றார்கள்.

மறுநாள் விடிந்ததும் அரச குமாரன் எழுந்திருந்து புறப்பட்டு நடந்து இருபது யோசனை தூரங் கடந்து கூட்டு ராஜாவின் பட்டணம் போய் அங்குள்ள சத்திரத்தில் தங்கினன். அங்குள்ளவர்களிடத்தில் "இவ்வூரில் என்ன அதிசயம்?" என்று கேட்டான். அவர்கள் "ஐயா! இவ்வூர் அரசனுக்கு இலக்ஷ்மியைப் போல் அழகுள்ள ஒரு பெண்ணிருந்தாள். விந்திய இராக்ஷஸி அவளைத் தூக்கிக்கொண்டு போய்விட்டாள். அவளைக் கண்டு கொண்டுவருகிறவன் அவளை மனைவியாகப் பெறுகிறதுந் தவிரப் பாதிச் சீமையையும் பெறுவான். இதுதான் விசேஷம்"

என்றார்கள். மறுநாள் காலையில் மாகாளன் எழுந்திருந்து பிரயாணப்பட்டுப் பதினைந்து யோசனை தூரம் போனான். பசியினாலும் தாகத்தினாலும் களைத்து அப்புறம் நடக்க மாட்டாமல், அந்த வனத்தில் ஆகாயம் அளாவி ஒரு யோசனை தூரம் பரந்து நிழல் செய்துகொண்டிருந்த ஓர் ஆலவிருக்ஷத்தைக் கண்டு அதன் கீழே தங்கினான். அப்பொழுது அஸ்தமிக்க நான்கு நாழிகைப் பொழுதிருந்தது. பசிக் களைப்பினால் மயங்கிச் சற்று நித்திரை செய்தான். சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு பேரிரைச்சல் கேட்டுத் திடுக்கென்று விழித்துக்கொண்டு, "இடி முழக்கம் போலிருக்கிற இந்தச் சப்தம் என்ன? எங்கிருந்து வருகிறது?" என்று பார்த்தான்; அது மரத்தின் மேலிருந் துண்டாகிறதென்று தெரிந்துகொண்டு அதற்குக் காரணம் என்னவென்று பார்ப்பதற்காக மேலே அண்ணாந்து பார்த்தான். அந்த மரத்தில் ஒரு பெரிய பாம்பு ஏறிப்போவதைக் கண்டு, இதைப் பார்த்து மரத்தின்மேலிருக்கும் பக்ஷிகள் கத்துகின்றனவென்று அறிந்து தன் கைவாளால் அந்தப் பாம்பை ஒரே வெட்டாக வெட்டி இரண்டு துண்டுகளாக வீழ்த்தினான். அதைக்கண்ட பக்ஷிகள் மனம் மகிழ்ந்து, அரசகுமாரனைப் பார்த்து, "ஐயா! எங்களுடைய பிராணனைக் காப்பாற்றி இரக்ஷித்த உமக்கு நாங்கள் என்ன உபகாரம் செய்ய இருக்கிறது? ஆனாலும் உமக்கு என்ன குறையிருந்தபோதிலும் அதை நிவிர்த்தி செய்வோம். ஏனென்றால் நாங்கள் கேண்டபேரண்டம் என்கிற பக்ஷி ஜாதி. எங்கள் பெற்றோர்கள் இரைதேடி வருவதற்காகத் தீபாந்தரங்களுக்குப் போயிருக்கிறார்கள். இன்னும் ஒரு

நாழிகைக்குள் வந்து விடுவார்கள். அவர்களைக் கண்டால் நீர் பயந்துவிடுவீர். ஏனென்றால் அவர்களுடைய சரீரம் ஒரு பெரிய மலைபோலிருக்கும். நீர் இங்கே இருக்கவேண்டாம். அதோ இருக்கிற செடி மறைவிலிரும். நாங்கள் கூப்பிடும்போது வரலாம்." என்றன.

அப்படியே மாகாளன் சமீபத்தில் இருக்கிற செடியின் மறைவில் ஒளிந்துகொண்டு அம்மரத்தைப் பார்த்துக்கொண்டே யிருந்தான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் பெருங்காற்று வீசிற்று; அதனால் மரங்கள் செடிகள் கொடிகளெல்லாம் வேர்பறிந்து விழுந்து காடுமுழுதும் இருந்த இடந்தெரியாமல் போகும்போலிருந்தது. இராஜகுமாரன் இதைக்கண்டு மனங்கலங்கி இது என்னவென்று யோசிக்கும்போது காடாந்தகாரமான இருள் மூடிக்கொண்டது. மாகாளன் திகைத்து ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அப்போது பெரிய மலைபோன்ற இரண்டு பக்ஷிகள் வந்து பெரிய ஆலமரத்தின்மேல் உட்கார்ந்தன. இராஜகுமாரன் இவைதாம் பக்ஷிக்குஞ்சுகள் சொன்ன கெண்ட பேரண்டப் பறவைகள்போலிருக்கின்றனவென்று சந்தேகந் தீர்ந்தான். அப்போது குஞ்சுகள் தந்தை தாய்களை இனிய குரலால் கூவியழைத்தன. அதுகேட்டுப் பெரிய பறவைகள் குஞ்சுகளிடம் வந்து, அவைகளைக் கொஞ்சிச் சீராட்டிக் "குழந்தைகளே! நாங்கள் நிதம் இரண்டு முட்டைகளிட்டுத் தினந்தோறும் இரண்டு குஞ்சுகள் பொரித்து வைத்துவிட்டு ஆகாரந்தேடப் போவோம்; வந்து பார்க்கும்போது குஞ்சுகளிருப்பதில்லை. இன்றைக்கு நீங்கள் உயிரோடிருப்பதைப்

பார்க்க எங்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. நடந்த விசேஷமென்ன?" என்று கேட்டன. குஞ்சுகள் "ஓர் இராஜகுமாரன் வந்து எங்களைப் பக்ஷிக்கவந்த பாம்பை வெட்டிவிட்டுக் காப்பாற்றினான்" என்று கூறிப் பாம்புத் துண்டுகளையும் காட்டின. பறவைகள் "அந்த இராஜகுமாரன் எங்கே? நாங்கள் அவனைப் பார்க்கவேண்டும்; அவனுக்கு அவன் விரும்பின உபகாரத்தைச் செய்யவேண்டும்" என்றன. குஞ்சுகள் இராஜகுமாரனை யழைத்துக் காட்டின. பறவைகள் அவனைக் கண்டு மகிழ்ந்து உபசாரஞ்சொல்லி, இராஜ போஜனம் அளித்துப் பக்கத்தில் படுக்க வைத்துக்கொண்டு தங்கள் இறக்கைகளால் அவனுக்குக் கெடுதி சம்பவியாதபடி கூடார மிட்டாற்போல மூடிக்கொண்டன.

மறுநாள் எழுந்திருந்து இராஜகுமாரனை நோக்கி "நீ வந்த காரியமென்ன?" என்று கேட்டுத் தெரிந்துகொண்டு, "நீ பயப்படாமற்போ, விந்தியமலைச் சாரலில் முதலில் நீ காண்கிற மாளிகையிலே தான் அந்த நான்கு இராஜகுமாரத்திகளு மிருக்கிறார்கள். அவர்களை முதலில் கண்டுகொள். மத்தியானம் அவர்கள் தனித்திருப்பார்கள் அவர்கள் உனக்குத் தந்திரம் சொல்வார்கள். அதன்படியே மலைக் குகையில் நுழைந்து மையை எடுத்துக்கொண்டு அந்தப் பெண்களையும் அழைத்துக்கொண்டு வந்து சேர். மத்தியில் இடையூறு நேர்ந்தால் எங்களை நினைத்துக்கொள். அந்த ஆபத்துகள் உடனேநீங்கிப் போம்! பின் எங்களை வந்து கண்டால் வேண்டிய உபகாரம் செய்கிறோம்" என்று கூறிச் செலவுகொடுத்தனுப்பின.

இராஜகுமாரன் அவைகளிடம் செலவு பெற்றுக் கொண்டு புறப்பட்டுப் போய் மத்தியானம் பதினைந்து நாழிகைக்கு இராஜகுமாரத்திக ளிருக்கும் மாளிகையை யடைந்து பயமில்லாமல் உள்ளே நுழைந்தான். அப்போது நான்கு இராஜ குமாரத்திகளும் தங்களுடைய தலைவிதியை நினைந்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இராஜகுமாரனைக் கண்டவுடன் திட்டென்று எழுந்திருந்து எதிர் கொண்டு அழைத்துப்போய், மரியாதை செய்து உணவு கொடுத்து, ஒரு பொன்னுசனத்தின் மேல் உட்காரச்செய்து தாங்களும் உட்கார்ந்து கொண்டு பின்பு அரசகுமாரனை நோக்கி "நீர் வந்த காரியமென்ன?" என்று கேட்டார்கள். மாகாளன் தான் வந்த காரியத்தைச் சவிஸ்தாரமாய்ச் சொன்னான். இராஜ குமாரத்திகள் அளவு கடந்த மகிழ்ச்சி கொண்டு, "மிக்க ஸந்தோஷமாயிற்று ; அந்தராக்ஷஸி மிகப்பொல்லாதவள் ; அவளைக் கொன்றால் அல்லாமல் மையை எடுப்பதும் எங்களை மீட்பதும் முடியாத காரியம். இதற்கென்ன யோசனை" என்றார்கள். அரச குமாரன் "எப்படியாவது அவளுடைய உயிர் நிலையைத் தெரிந்துசொல்வீர்களானால் நான் அவசியம் அவளைக் கொல்லுகின்றேன்" என்றான். அவர்கள் "அப்படியே செய்கிறோம்" என்றார்கள். பின் அரச குமாரனும் அவர்களும் நெடுநேரம் ஸந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். அஸ்தமிக்கும்போது பூமிக்குள் ஒரு குழியைவெட்டி, அதற்குள் மாகாள ராஜனை உட்கார வைத்து, மேலே பலகை போட்டு மூடி அதன் மீது மணலைக் கொட்டி மறைத்து விட்டார்கள்.

சற்று நேரத்துக் கெல்லாம் இராக்ஷஸி வந்து "இங்கே நர மாம்சம் நாறுகிறதே! இங்கே யார் வந்திருக்கிறார்கள்? சொல்லுங்கள்" என்று கேட்டாள். இராஜ குமாரத்திகள் சிரித்துக்கொண்டு "இதென்ன விநோதம்? எங்களைத்தவிர ஒருவருமில்லையே! உன்னுடைய பல்லிடுக்கில் புகுந்திருக்கும் நரமாம்சமே நாறுகிறது" என்றார்கள். அரக்கி "அப்படியா! ஒருகாலிருக்கலாம்; எனக்கு விரைவில் அன்னம்படையுங்கள்" என்றாள். ஐந்து கல அரிசி வடித்த சோற்றையும், அதற்குத்தக்க காய்கறி குழம்புகளையுங்கொண்டு வந்து கொட்ட, இராக்ஷஸி அவற்றை நாலைந்து உருண்டையாக உருட்டி விழுங்கி விட்டுப் பத்துக்குடம் தண்ணீரையுங் குடித்து ஏப்பமிட்டுக் கொண்டு படுக்கையில் வந்து உட்கார்ந்தாள். பெண்கள் நால்வரும் புசித்துப் பின் அரக்கியினருகே வந்து உட்கார்ந்து அவளது கால்களைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். சற்று நேரம்பொறுத்து இராக்ஷஸியை நோக்கி "அம்மா! எங்களுக்கு ஒரு பெருங்கவலை நேரிட்டிருக்கிறது. அதை நிவிர்த்தி செய்யவேண்டும்" என்றார்கள். இராக்ஷஸி "அது என்ன?" என்றாள். பெண்கள் "நீர் எங்களைத் தூக்கிக்கொண்டு வந்து உமது பணிவிடைக்கு வைத்துக்கொண்டீர். இந்த இடத்தில் மனித சஞ்சாரமேயில்லை. நீரோ பகல் முழுவதும் வீட்டிலிருப்பதில்லை. நீர் போகிற இடமோ எங்களுக்குத் தெரியாது. பகல் முழுதும் நாங்கள் தனிமையாகவே யிருக்க நேரிட்டிருக்கிறது. இராக்காலம் நீர் வந்த பிறகுதான் எங்களுக்குச் சற்று மன ஆறுதல் உண்டாகிறது. ஆகையால் எங்களுக்கு உம்மைத் தவிர வேறு திக்கில்லை. நீர் செய்

கிற காரியங்களோ எல்லாருக்கும் விரோதமான கொடிய காரியங்களாக இருக்கின்றன. யாராவது பலவந்தர்களாயுள்ளவர்கள் உம்மைக் கொன்று விட்டால், பிறகு எங்கள்கதி என்னமாய்ப் போகும்? இதற்கென்ன சொல்லுகிறீர்?" என்றார்கள். இராக்ஷஸி இடி முழக்கம்போலச் சிரித்துக் கொண்டு, "பைத்தியகாரப் பெண்களா! உங்களுக்கேன் இந்தக்கவலை? என்னை வெல்லுகிறவரும் கொல்லுகிறவரும் இந்த உலகத்தில் இல்லை. நீங்கள் பயப்பட வேண்டாம்" என்றாள். அதற்குள் ஒருபெண் ஒரு குடம் நிறைய மதுவை எடுத்துக் கொடுத்தாள். அதைக் குடித்து விட்டு மதிமயங்கி யிருக்கும்போது மறுபடியும் அதை வற்புறுத்திக் கேட்டார்கள். இராக்ஷஸி மதுமயக்கத்தால் வீராவேசங் கொண்டு "பெண்களே! உண்மையைச் சொல்லுகிறேன் கேளுங்கள். என் சரீரத்தில் என் உயிர் இல்லை, விந்திய மலைக் குகையில் இருக்கிறது" என்றாள். பெண்கள் சிரித்து "உடலைவிட்டு உயிர் இருக்குமா? இது நம்பத்தக்கதா?" என்று கேட்டார்கள். இராக்ஷஸி "எனக்குத் தெய்வாநுக்கிரகம் அப்படித்தான். விந்திய மலையின்மேலே ஏறினால் அங்கே ஒரு வனமிருக்கும். அதற்குள் நுழைந்தால் அங்கே ஒரு குகை தோன்றும். அதன் வாயிலை ஒருபாறை மூடியிருக்கும். அதை ஒருவராலும் அசைத்தெடுக்க முடியாது. எடுத்துவிட்டால் உள்ளே நுழைய முடியாது. நுழைந்தால் பெரிய கதண்டுகள் கொட்டிக் கொன்றுவிடும். அதையும் கடந்து போய் விட்டால், அடுத்த அறையில் பாம்புகள், கருந்தேள், செந்தேள், நட்டுவாய்க்காலி முதலியன நிறைந்திருக்கும். அவை கொன்றுவிடும். அதையும்தாண்

டிப்போய் விட்டால் அடுத்த அறையில் பேய் பூதங்கள் வசிக்கின்றன. அவைகள் விழுங்கிவிடும். அதையுங் கடந்துபோய் விட்டால், அவ்விடம் ஓர் இருட்டறையிருக்கும். அங்கு ஒன்றுந்தோன்ருது. அதற்கு நேரான சுவரில் ஒரு பிரை இருக்கிறது. அந்தப் பிரையின் கதவைத் திறந்தால் சூரியனைப் போலப் பிரகாசம் உண்டாகும். அதன் பக்கத்தில் ஒருபிரையிருக்கும். அது இரும்புக் கதவால் மூடப் பட்டது. அந்தக் கதவுக்குமேல் ஒரு சாவி தொங்கும். அதை யெடுத்துக் கதவைத் திறந்தால் அதற்குள் ஒரு இரததினச் சிமிழிருக்கும். அதைத் திறந்தால், அதற்குள் மூன்று அழகிய பொன்வண்டுக ளிருக்கும். அவற்றுள் இரண்டு வண்டுகள் உயிரில் லாமலிருக்கும்; ஒன்று உயிரோடிருக்கும். அதைக் கொன்ருல் மற்றிரண்டும் பிழைத்துவிடும். இப்படியே ஒன்று சாக மற்றவை பிழைக்கும். அவைதாம் என் உயிர். இரண்டின் உயிர் என்னிடமிருக்கும். என் உயிரில் மூன்றில் ஒரு பங்கு அந்தச் சிமிழிலிருக்கும். மூன்று வண்டுகளையும் சேர்த்துக் கொன்ருல் எனக் குச் சாவு நேரிடும். இது யாரால் செய்யத்தகும்? ஒரு வராலும் முடியாது. யாராவது அந்த வண்டுகளைத் தொட்டால் உடனே எனக்குத் தலைவலியுண்டாம். நான் உடனே போய் அவர்களைக் கொன்றுவிடுவேன். ஆகையால் நீங்கள் பயப்பட வேண்டியதில்லை'' என்று சொன்னாள்.

''இனி எங்களுக்குப் பயமில்லை'' என்று சொல்லி மகிழ்ந்து யாவரும் தூங்கினார்கள். மறுநாள் அரக்கி யெழுந்து வெளியே போய்விட்டாள். பெண்கள் அரச குமாரனையெடுத்து அவனுக்கு ஸ்நானம் செய்

வித்துப் போஜனம் அளித்துப் பின் நடந்த சங் கதியை அன்போடு சொன்னார்கள். இராஜகுமாரன் "நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சாதீர்கள்; நான் போய் வருகிறேன்" என்று விடைபெற்றுக்கொண்டு புறப் பட்டுப்போனான்.

போன இராஜகுமாரன் விந்தியமலை போய்ச் சேர்ந்து குகையை யடைந்து கதவைப் பார்த்துப் பயந்து கண்டபேரண்ட பக்ஷிகளை நினைத்த மாத்தி ரத்தில் பாறை தூளாய்ப் போய்விட்டது. உள்ளே நுழைந்தான். கதண்டுகள் கொட்ட வந்தன. கண்ட பேரண்ட பக்ஷியை நினைத்த மாத்திரத்தில் அவை ஓடிப் பதுங்கின. இப்படியே மூன்று அறைகளை யும் கடந்து நான்காம் அறையிற் புகுந்து கண்ட பேரண்ட பக்ஷியை நினைத்த மாத்திரத்தில் ஒளி பிர காசிக்கச், சாவியை யெடுத்து அலமாரைத் திறந்து சிமிழைக் கையிலெடுத்துத் திறந்து, அதற்குள்ளிருக் கும் வண்டுகளை வெளியிலெடுத்துவிட்டு உயிருள் ளதை நசுக்க, மற்றவை பிழைத்தன. மற்றொன்றைக் கொல்ல வேறொன்று பிழைத்தது. இப்படியே வேடிக்கை செய்து கொண்டிருக்கும்போது, நூறு யோசனை தூரத்திலிருந்த இராக்ஷஸிக்குத் தலைவலி ஜ்வரம் கண்டது. உடனே அவள் பறந்து கொண்டு ஓடிவந்து குகைக்குள் நுழைந்தாள். அது தெரிந்த மாகாளன் மூன்று வண்டுகளையுஞ் சேர்த்து நசுக்க அவைகளிறந்தன. இராக்ஷஸியும் அப்படியே கீழே விழுந்து இறந்தாள். பின்பு மாகாளன் இராஜகுமா ரத்திகளிடம் போய்ச் சங்கதி தெரிவித்து அவர்களை யும் அழைத்துக்கொண்டு வந்து இராக்ஷஸியின் பிரே தத்தைக் காட்டினான். அவர்கள் மகிழ்ச்சி யடைந்து,

5

அரசகுமாரனைப் புகழ்ந்து வாழ்த்தினார்கள். அதற்குள் அளவில்லாத நிதிகளிருப்பதை யிந்தப் பெண்கள் தெரிவித்தபடியால், அரசகுமாரன் பறவைகளை நினைத்துப் பாறையைத் தொட அது குகைவாயிலை மூடிக்கொண்டது. பின்பு ஐவரும் மாளிகை வந்து சேர்ந்து மகிழ்ந்திருந்தார்கள்.

மறுநாள் ஐவரும் புறப்பட்டு ஊருக்குப் பிரயாணப்பட்டு நடந்தார்கள். பத்துயோசனை போனதும் அங்கே ஒரு நதி ஜலம்பெருகிப் பெரு வெள்ளமாய் வரக்கண்டு, அரசன் கெண்டபேரண்ட பக்ஷியை நினைத்துக் கொண்டான். அந்த க்ஷணமே அது அங்கே வந்து நான்கு பெண்களையும் முதுகின்மே லேற்றிக்கொண்டு இராஜ குமாரனைத் தன் பிடரியில் வைத்துக்கொண்டு நடு ஆற்றில் வருகையில் ஏதோ ஒரு அசந்தர்ப்பத்தினால் இராஜகுமாரன் தவறி ஆற்றில் விழுந்துவிட்டான். அது கண்ட பெண்கள் கோவென்றலறினார்கள். அதற்குள் பறவை இக்கரை வந்துவிட்டது. அங்கே வந்த பக்ஷி மோசம் நேரிட்டதை யறிந்து, பரிதாபப்பட்டுப் பெண்களை அழ வேண்டாமென்று சொல்லி, உறிஞ்சு இராஜன் பெண்ணைப் பார்த்து, "உறிஞ்சு ராஜா பெண்ணே, உறிஞ்சு ராஜாபெண்ணே!! உனக்குப் புருஷன் வேண்டுமென்றிருந்தால் இந்தத் தண்ணீரை உறிஞ்சிவிடு" என்றது. அப்படியே அவள் அந்த ஆற்று நீரை முற்றுங்குடித்தாள். பின்பு 'பெருக்கு ராஜாபெண்ணே! பெருக்கு ராஜா பெண்ணே!! உனக்குக் காதலன் வேண்டுமென்றிருந்தால் இந்த ஆற்றிலுள்ள கல்லையும் மண்ணையும் பெருக்கிச் சேர்த்துக் குவி" யென்றது. அவள் அப்படியே பெருக்கிக் குவித்

தாள். பின் "பொறுக்கு ராஜா பெண்ணே! பொறுக்கு ராஜா பெண்ணே!! உனக்கு ஆம்படையான் வேண்டும்போலிருந்தால் இதில் கலந்து கிடக்கிற எலும்பு நரம்பு கபாலம் கைகால் முதலிய வற்றைப் பொறுக்கு" என, அவள் அப்படியே ஒரு க்ஷணத்தில் செய்து முடித்து விட்டாள். அப்புறம் "கூட்டு ராஜா பெண்ணே! கூட்டு ராஜா பெண்ணே!! உனக்குக் கணவன் வேண்டுமானால் இந்த அவயவங்களைச் சரியாய்ச் சேர்த்துப் பொருத்திவை" யென்று சொல்ல, அவளும் அவ்வாறே செய்தாள். பின் கெண்டபேரண்ட பக்ஷி தன் வாயால் அவன் வாயில் ஊத அரச குமாரன் உடனே உயிர் பெற்றெழுந்திருந்தான். பின் எல்லாரும் கெண்டபேரண்ட பக்ஷி வனம் வந்து ஒரு நாள் தங்கி மறுநாள் பறவையின் உதவியால் கூட்டு ராஜன் நகரம் வந்து சேர்ந்தார்கள்.

இவ்விராஜன் தன் மகளையும் மற்றவர்களையும் அன்போடு எதிர்கொண் டழைத்துப்போய் உபசரித்து மாகாள ராஜனுக்குத் தன் மகளைக் கொடுத்துப் பாதி ராஜ்யமும் கொடுத்துச், சில நாள் தன் ஊரில் வைத்திருந்து, பின் சில சேனையோடு ஊருக்கு அனுப்பிவிட்டான். பொறுக்கு ராஜன் பட்டணத்துக்கு எல்லாரும் வந்தார்கள். அவ்வூர் அரசன் மாகாளனை மிக அன்போ டழைத்துப்போய்த் தன் புத்திரியை மணம் புரிவித்துப் பாதிச்சீமையுங் கொடுத்தான். மாகாளன் சிலநாள் அங்கிருந்து கொடுத்த சீதனங்களையும் சேனைகளையுங் கூட்டிக்கொண்டு பெருக்கு ராஜன் பட்டணம்போய் அவன் மகளை விவாகம் புரிந்து பாதிச் சீமையைப் பெற்றுக்

கொண்டு, பின்பு உறிஞ்சு ராஜன் பட்டணம் போனன் அவ்வரசன் மாகாளனுக்கு வெகு மரியாதை செய்து தான் சொன்னபடி தன் புத்திரியையும் பாதி ராஜயமும் பல வரிசைகளும் சீதனமுங் கொடுத்தனுப்பினன். மாகாளன் நான்கு மனைவிகளோடும் வெகு சம்பிரமத்துடன் வருகிறதை அளகேசன் கேள்விப் பட்டு எதிர்கொண்டு வந்து மேள தாள வாத்திய கோஷங்களோடு ஊர்வலஞ் செய்வித்து அழைத்துப் போய்த் தன் பட்டத்தை யவனுக்குக் கட்டி அவன் அரசு புரிவதைப் பார்த்து மகிழ்ந்திருந்தான். மாகாளன் தன் சிறிய தாயார் பிழையை மன்னித்துவிட்டுத் தன் நான்கு மனைவிகளோடும் வெகு சுகமாக நீடூழி வாழ்ந்து வந்தான்.

நான்கு இராஜ குமாரத்திகளின் கதை முற்றிற்று.

---

## மூன்றாவது
## எள்ளுப் பதுமைக் கதை.

---

ஜயபுரி என்னும் நகரத்தில் ஜயந்தனென்னும் அரசன் அரசு புரிந்து வந்தான். அவனுக்கு ஸ்ரீமந்தினி என்ற ஒரு மனைவி யிருந்தாள். அவள் குணங்களிலும் அழகிலும் சிறந்த புண்ணியவதி. அரசன் அவளை நேசித்ததுந் தவிரக், குடிகளெல்லாரும் அவளைத் தமது மாதாவைப்போலக் கருதிப் பணிந்து நடந்து வந்தார்கள். ஆனல் அவ்வரசனுக்கு வெகு நாள் வரையில் புத்திரபாக்யம் வாய்க்காமலிருந்தது. அதனல் அரசன், வேறொரு பெண்ணை விவாகம் பண்ணிக்கொண்டான். அந்தப்பெண் ரூபவதியாயிருந்

தாலும் பொறாமை எரிச்சல் முதலிய துர்க்குணங்கள் நிறைந்தவளாக இருந்தாள். அரண்மனைக்கு வந்தது முதல் மூத்த மனைவியாகிய தன் சக்களத்தியைப் பகைத்து வந்தாள். ஒரு நாள் அரசன் தன் அந்தப்புரத்துக்கு வந்தபோது அவனோடு பேசாமல் பிணங்கியிருந்தாள். அரசன் பலவாறு நல்ல வசனங்கள் கூறியும் கேளாமல், மூத்தாள் அரண்மனையில் உள்ள பரியந்தம் தனக்குச் சுகமில்லை யென்றும், அவளை ஊருக்குப்புறமாக வைத்திருக்க வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் தான் நான் உம்மோடு மகிழ்ந்து பேசுவேனென்றும் கூறினாள். அரசன் அவள்மேல் வைத்த பிரியத்தினால் அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டு, மறுநாட் காலையில் மந்திரிகளை யழைத்து ஸ்ரீமந்தினியைக் காட்டுக்கு நடுவிலிருக்கும் சிறிய வீட்டில் கொண்டுபோய் விட்டு வரும்படி சொன்னான். அவர்கள் இராஜாக்கினையைக் கடக்கப் பயந்து, அவளையும் அவளுடைய தாதியையும் அழைத்துக் கொண்டுபோய் நடுக் காட்டிலிருக்கும் வீட்டில் விட்டு வந்தார்கள். ஸ்ரீமந்தினி தனக்கு நேர்ந்த விபத்துக்கு மனம் வருந்தி, யாதொன்றும் நினையாமல் தன் குறைகளை யெல்லாம் தெய்வத்தினிடத்தில் முறையிட்டுக் கொண்டிருந்தாள். பிறகு இளையாளும் அரசனும் கவலையற்றிருந்தார்கள்; இப்பொழுதும் அரசன் புத்திரனை யடையவில்லை.

2. இப்படி யிருக்கையில், நாட்டுக் குடிகளெல்லாரும் மந்திரியினிடம் போய்க் காட்டில் மிருகங்கள் அதிகமாய் விருத்தி யடைந்திருக்கின்றன வென்றும் அவைகள் பயிர்களை யழித்துக் கெடுப்பதுந்தவிர எதிர்ப்பட்ட மனிதர்களையுங் கொன்று போடுகின்

றன வென்றும் முறையிட்டார்கள். அவர்களுக்குத் தக்கபடி சமாதானம் சொல்லி அனுப்பிவிட்டுப் பின் மந்திரிகள் அரசனுக்கு இந்தச் சமாசாரந் தெரிவித்து வேட்டைக்குப் போக வேண்டுமென்றார்கள் அரசனும் அதற்குச் சம்மதித்து வேட்டைக்காரர்களை மறுநாட்காலையில் வரும்படி சொல்லி அனுப்பினன். மந்திரிமார்கள் வேட்டைக்காரர்களுக்கு உத்தரவு செய்து வேட்டை யாடுவதற்குரிய வலை நாய் முதலியவைகளையும், வில் வாள் ஈட்டி முதலிய பல ஆயுதங்களையும், இரதம் குதிரை முதலியவைகளையும் சித்தப் படுத்திக்கொண்டு தாங்களும் சந்நத்தராயிருந்தார்கள். மறுநாள் விடிந்தவுடன் யாவரும் புறப்பட்டு வனம்போய்ச் சேர்ந்து வலைகட்டி, நாலாபக்கங்களிலு மிருந்த மிருகங்களைக் கலைத்துவிடத் தொடங்கி, கொம்பு தாரை முதலிய வாத்தியங்களையும் தம்பட்டம், துடி, பேரிகை, டக்கை, முருடு முதலிய பறைகளையும் முழக்கினர்கள். பின்னர் யாவரும் தத்தம் இரதங்களினின்றும் இறங்கி, குதிரைமேலேறித் தங்களுக்கிசைந்த ஆயுதங்களையெடுத்துக் கொண்டு வேட்டையாடுவதிற் பிரவேசித்து, புலி, கரடி, யாளி, சிங்கம், காட்டுப் பன்றி, கோநாய், செந்நாய், முள்ளம் பன்றி, நரி, யானை, மான் முதலிய மிருகங்களைக் கொன்று குவித்தார்கள். இவ்வாறு வேட்டையாடிக்கொண்டு ஒவ்வொருவரும் பிரிந்து தனித்தனியே போய்விட்டார்கள். அரசன் வேட்டையாடிக்கொண்டு வெகுதூரம் போய்விட்டான்.

3. இப்படி யிருக்கையில் திடீரென்று வானம் கறுத்தது. எங்கும் பேரிருள் கவிந்துகொண்டது.

சிறு காற்று வீசிப் பெருங் காற்றாயிற்று. பேரிடி முழக்கத்தோடு மழை பொழிய ஆரம்பித்தது. அரசனுடைய பரிவாரங்களெல்லாம் அவனைத் தேடிக் கொண்டு நாலாபக்கங்களிலும் ஓடினார்கள். அரசனோ தான் போகுமிடம் இன்னதென்று தெரியாமல் குதிரையைச் செலுத்திக்கொண்டு ஓடினான். இருட்டு அதிகமா யிருந்ததனால் திக்குத் திசை தெரியாமல் மயங்கி மழையால் நனைந்து, குளிரால் வருந்தி, நடுக்கல் எடுத்துத் தெய்வத்தை நினைத்து இந்தச் சமயம் என்னைக்காப்பாற்றி இரக்ஷிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு நாலா பக்கமும் சுற்றிப் பார்த்தான். ஒரு மூலையில் சிறிதாக ஒளி தோன்றியது. அதற்கு நேராகக் குதிரையைச் செலுத்திக் கொண்டோடினான். அவ்வெளிச்சத்தின் அருகில் வந்தவுடன் அது ஒரு மாளிகையாகக் காணப்பட்டது அது இன்னாருடையதென்று தெரியாமையால் வாசற்படியில் குதிரையை நிறுத்திக் கீழே யிறங்கிக் குதிரையைக் கையில் பிடித்துக்கொண்டு, திண்ணையின்மேலேறிச், சரீரம் வெடவெடவென்று நடுங்கப் பல்லு படபடவென்று அடிக்க நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பெண் வந்து பார்த்து யாரென்று கேட்கத் தான் இன்னானென்று சொல்ல வெட்கப்பட்டு "நானொரு வழிப்போக்கன்; மழைக்காக இங்கே வந்தொதுங்கினேன்; மழைவிட்டதும் போய் விடுகிறேன்" என்றான். அந்தப்பெண் அவருடைய குரலால் அரசனென்று தெரிந்துகொண்டு திடு திடென்று உள்ளே ஓடித் தன் எஜமானியைக் கூவி, "அம்மா! நம் வீட்டுத் திண்ணையில் மகாராஜா வந்திருக்கிறார். மழையால் நனைந்து குளிரால் நடுங்கி

ஒடுங்கி நிற்கிறார்" என்றாள். அதுகேட்டு ஸ்ரீமந்தினி பதைபதைத்துத் தீபத்தை யெடுத்துக் கொண்டோடி வந்து அரசனைப் பார்த்து அவருக்கு வணங்கிக் கையைப் பிடித்து உள்ளே அழைத்துக் கொண்டுபோய் உடுத்துக் கொள்ளப் புதிய வஸ்திரம் அளித்துக் குளிர்காய நெருப்புச்சட்டி கொண்டுவந்து வைத்து உபசரித்தாள். பிறகு வேலைக்காரியை அழைத்துக் குதிரையைக் கொட்டிலிற் கட்டிப் புல் முதலிய போட்டுப் பராமரிக்க உத்தரவு செய்துவிட்டு அதிக விரைவில் சமையல்செய்து அரசனுக்கு அன்போடு போஜனம் இட்டு உபசரித்தாள். அரசன் அந்த வீட்டிலே அன்றிரவு சயனித்துக்கொண்டான். தன் மூத்த மனைவியின் குணாதிசயங்களையும், தான் அவளுக்குச் செய்த பிழையையும், அவள் அதைக் கவனியாமல் ஆபத்து வேளையில் தனக்குச் செய்த உபசாரத்தையும் நினைத்து மனம் உருகித் தான் நகரத்துக்குப் போனவுடன் அவளை அரண்மனைக்கு அழைப்பித்துக்கொள்ள வேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு நித்திரை போய்விட்டான். விடியற் காலையி லெழுந்திருந்து ஊருக்குப் போய் வருகிறேனென்று கூறி, அவளிடம் செலவுபெற்றுக் குதிரை மேலேறிக்கொண்டு போய்விட்டான். அரண்மனை போய் இளையாளுடைய முகத்தைப் பார்த்தவுடனே மூத்த மனைவியை முற்றிலும் மறந்து போனான்.

4. இப்படி ஒரு மாதம் கழிந்தது. காட்டிலிருக்கிற ஸ்ரீமந்தினியின் பணிவிடைக்காரி தனக்குள்ளே ஒரு தீர்மானம் செய்துகொண்டு, தன் எஜமானி சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருக்கிற வேளையில் அவளை வணங்கி "அம்மா! எனக்குள் ஒரு யோசனை

தோன்றுகிறது. அதைச்சொல்லச் சொன்னால் சொல லுகிறேன்"; என்றாள். அவள் சொல் என வேலைக்காரி—" அம்மா! நம்முடைய அரசன் நம்மைச் சட்டைபண்ணவேயில்லை. அவருடைய ஆபத்துக் காலத்தில் உதவி செய்ததைக்கூட இலக்ஷி யம் பண்ணவில்லை. இளையாளோ அரசன் தயவு தனக்குக் கிடைத்திருக்கிறதினால் இறுமாந்து நம்மை வெகு அவமானம் பண்ணுகிறாள். அந்த அவமானம் சகிக்க முடியவில்லை. அது உங்களுக்குத் தெரி யாது. சொன்னால் நீங்கள் உயிரை வைத்திருக்க மாட்டீர்கள். நான் தினந்தோறும் படியரிசி வாங் கப்போகிறேன் அல்லவா? அப்பொழுது அவள் பேசுகிற பேச்சும், பண்ணுகிற பரிகாசமும் சொல்ல முடியாது. உமக்காக அவைகளை நான் சகித்துக் கொண்டு பேசாமலிருக்கிறேன். அவளுடைய இறு மாப்பை அடக்க வேண்டும், அதற்காக ஒரு யுக்தி செய்திருக்கிறேன். அதைப் பிறகு சொல்லுகிறேன். நீர் அது வரையிலே என் பேச்சுப்படியே நடக்க வேண்டும். நான் செய்யும் யுக்தியினால் அரசன் நம் மிடம் மதிப்பு வைப்பதுந் தவிர சகல சாமான்களுங் குறைவில்லாமல் கொடுத்தனுப்புவான். அதன் பின் நடக்கவேண்டிய வற்றுக்கு யோசித்துக் கொள்ளலா மென்று நினைக்கிறேன்" என்றாள்.

5. ஸ்ரீமந்தினி அது கேட்டு இடி முழக்கங் கேட்ட சர்ப்பம்போல மதி மயங்கி, "போதும் உன் வாயை மூடு, நீ ஏதேனும் பொய்யை அரசனிடம் சொல்லி என் தலைமேல் கல்லைப்போடப் பார்க்கிறாய் போலிருக்கிறது. நானுயிரோடிருப்பதில் உனக்குத் திருப்தி யில்லையாக்கும்! இனி இப்படிப்பட்ட பேச்

சக்களை என் காதிலே போடாதே" யென்றாள். வேலைக்காரி, "அம்மா! நான் அப்படிச் செய்வேனோ? உம்முடைய உப்பும் சோறும் தின்று ஜீவிக்கிறபடியால் உமக்கு உபகாரஞ் செய்ய நினைக்கிறேனே ஒழியக் கெடுதி செய்ய நினைக்கவில்லை. நான் புத்தியில்லாமல் மூடத்தனமாய்ச் செய்வேனோ? ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். உத்தரவு கொடுங்கள். உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும்" என்று அவளைத் தேற்றி உத்தரவு பெற்றுக்கொண்டு படியரிசி வாங்குவதற்கு அரண்மனை போய்ப் படியரிசி வாங்கிக் கொண்டு திரும்பி வருகிறபோது அரசனிடம் போய், அவன் தன்னைப் பார்க்கக்கூடிய இடத்தில் நின்று கொண்டிருந்தாள். சற்று நேரம் பொறுத்து அரசன் திரும்பிப் பார்த்து 'என்ன' என்று கேட்டான். அவள் "ஓர் இரசியம்" என்றாள். அவன் தனியாக வந்தான். அவனிடம் இரசியமாக ஏதோ தெரிவித்து அவனுக்கு ஸ்ரீமந்தினியினிடம் அன்புண்டாகும்படி செய்து "மகாராஜாவே, அம்மா வாய்க்கினிய பதார்த்தங்களில் பிரியப்படுகிறார்கள். நான் என்ன செய்வேன்?" என்றாள். அரசன் அதுகேட்டு மகிழ்ந்து "வேண்டியவை எல்லாந் தருகிறேன். அவளுக்கு இஷ்டமானதை நடத்து" என்றுசொல்லி, ஒரு பிரதானியை அழைத்து "இவள் கேட்கிற எல்லாவற்றையும் குறைவில்லாமல் கொடுத்துவா! தடை செய்யாதே! இப்பொழுதே சகல பதார்த்தங்களையுங் கொண்டுபோய் நிறைத்துவா" என்று ஆஞ்ஞாபித்தான். அவன் அப்படியே வீட்டுக்கு வேண்டிய சகல பதார்த்தங்களையும் வேலைக்காரி கேட்ட யாவற்றையும் குறைவில்லாமல் இரண்டு வண்டிகளி

லேற்றி அவள் கூட அனுப்பிவிட்டான். வேலைக்காரி தான் செய்த காரியத்துக்காகத் தனக்குள் மகிழ்ந்து, அந்த இரண்டு வண்டிச் சாமான்களுடன் வீட்டுக்கு வந்து செய்திசொல்லி அரசன் அனுப்பிய இரண்டு வண்டிச் சாமான்களேயும் காட்டினுள்.

6. இராஜபத்தினி, அரசனிடம் இவள் ஏதோ பொய் சொல்லி வாங்கி வந்திருப்பதாக நிச்சயித்து அவைகளால் மகிழ்ச்சி யடையாமல் மனந் துடி துடித்து, உன் யுக்தி வெளிப்பட்டால் நாமிருவரும் சுண்ணும்புக்காளவாய்க்கிரையாகித் துர்மரணமாய் நரகத்தையும் அனுபவிக்கும்படி வருமே; இதற் கென்ன செய்வேன்'' என்று துக்கித்துக்கூற, வேலைக் காரி, "அம்மா, நான் அப்படிச் செய்வேனு? நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், நீங்கள் மாத்திரம் நான் சொல்லுகிறபடி கேட்டு நன்ருய்ப் புசித்துக் களித்து இளைப்பில்லாமல் சரீரத்தைப் போஷித்துக் கொள்ளுங்கள். மற்றைய விஷயங்களுக்கு நான் எப்படியாவது சரிசெய்து கொள்ளுகிறேன்'' என்று மகிழ்ச்சியோடு கூறினுள். அரசி, இவளுடைய தைரி யம் பெரிது, இவளிடத்தி லேதோ ஒரு வல்லமை இருக்கிறது. இல்லாவிட்டால் இப்படித் துணிந்து செய்வாளா; எல்லாவற்றிற்குந் தெய்வந்தான் துணை செய்ய வேண்டும் என்று கடவுளைத் தியானித்துக் கொண்டிருந்தாள். வேலைக்காரி தினந்தோறும் படி யரிசி வாங்க அரசன் அரண்மனைக்குப் போகிற வழக் கம்போலப் போய்த் தனக்கு வேண்டியவற்றை யெல் லாம் கேட்டு வாங்கிக்கொண்டு வருவாள். இந்த இரகசியம் இளையாளுக்குத் தெரியாது. இப்பொழுது தன் பட்ட மகிஷியைப்பார்க்க அரசன் விருப்பங்

கொண்டான். ஒருகால் இளையாளுக்குத் தெரிந்தால் மோசம் நேரிடவுங் கூடும் என்கிற பயத்தினால் பிறகு சும்மா இருந்துவிட்டான். வேலைக்காரியினிடம் மாத்திரம் பட்டமகிஷியின் சுகசௌக்கியங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு மகிழ்ச்சியடைந்தான். அவளைப் பத்திரமாய்ப் பாதுகாத்து வரும்படியும், வேண்டியவைகளைத் தடையில்லாமல் கேட்டு வாங்கிக்கொண்டு போகவும் உத்தரவளித்தான். பட்டமகிஷிக்கு உயர்ந்த ஆடையாபரணங்கள் கொடுத்தனுப்பி வந்தான். பல தேசங்களிலிருந்து வரும் பலவகையான பழவர்க்கங்கள், காய்கறி முதலிய எல்லாம் அப்போது அப்போது கொடுத்தனுப்பி வந்தான். இப்படியாக ஆறு மாதத்திற்கு மேலே நடந்து வந்தது.

7. இப்பொழுது இராஜபத்தினி ஸ்ரீமந்தினி "பல நாள் திருடன் ஒரு நாளகப்படுவான்" என்கிற கதையாய் முடிந்தாலென்னசெய்கிற தென்றெண்ணி மிகுந்த வருத்தங்கொண்டாள். அதனால் நாளுக்கு நாள் திருமேனி யிளைக்கத் தொடங்கிற்று. முகத்தில் பிரகாசமில்லை, மனதில் பலபல எண்ணங்கள் தோன்றின. யாது செய்வோ மென்கிற ஏக்கம் பெரிதாயிற்று. இதை அரசன் அறிந்து தண்டிப்பதற்கு முன்னாலே யிறந்துபோவது நலமென்று தோற்றியது. இப்படியாகக் கலங்கியிருப்பதை வேலைக்காரி தெரிந்துகொண்டு "அம்மா! உமக்கேன் இந்தக் கவலை? உமக்கு ஒரு மானக்கேடும் சம்பவியாது. உமக்குமேலான பெருவாழ்வு உண்டாகும். சகல போகபோக்கியங்களையு மனுபவித்துச் சக்களத்தியின் இறுமாப்படங்கும்படி பெருவாழ் வுண்டாகும் படியான காலம் வந்துவிட்டது. இந்த உலகம்

முழுவதும் உம்முடையதே! உமக்கு யாதொரு குறைவுமில்லை. கவலையற்றுக் களித்திருங்கள். நான் அதற்குத்தகுந்த ஏற்பாடு செய்துவிடுகிறேன்" என்று சொல்லி அவளைச்சமாதானப்படுத்தினள். பட்ட மகிஷி சற்று மகிழ்ந்திருந்தாள்.

8. பத்தாம் மாதம் பிறந்தது. வேலைக்காரி அரசனிடம்போய் "மகாராஜவே! இது நல்ல சமையம்; துணைக்கு என் தாயார் வந்திருக்கிருள். அம்மாளைப் பிரியாமலிருக்கும்படி அவளை வைத்திருக்கிறேன். சொல்லி யனுப்புவேன்; அப்பொழுது அரண்மனைச் சோதிடர்களை யனுப்பவேண்டும். நானும் அங்கே வரும்படி அவரைக் கேட்டுக்கொண்டேன். அவரும் அடிக்கடி அங்கே வந்து போய்க் கொண்டிருக்கிருர். மகாராஜா அவர்களும் உத்தரவு செய்தால் நல்லது" என்றுள். அரசனும் அப்படியே உத்தரவு செய்தான். பக்கத்திலிருந்த சோதிடர் "வேலைக்காரி நல்லவள். அவள் சொன்ன பேச்சினல் நம்மிடம் அரசனுக்குப் பக்ஷம் உண்டாயிற்று. நாம் அவள் மனம்போல் நடந்து கொள்ள வேண்டும். பக்ஷிகளில் காக்கையும், மிருகங்களில் நரியும், புருஷரில் நாவிதனும், பெண்களில் வேலைக் காரப் பெண்களும் தந்திரமுள்ளவர்களென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிருர்கள். ஆகையால், இவள் பேச்சில் ஏதோ தந்திரமிருக்கிறது போலத் தோன்றுகிறது. எப்படியாளுல் என்ன? நமக்குக் காசு தானே. நமக்கு இரண்டு பக்கத்திலும் வரும்படியிருக்கிறதென்று தனக்குள்ளே மகிழ்ந்து, வேலைக் காரியைப் பார்த்து, "பெண்ணே! இதற்கு மகாராஜாவிடம் உத்தரவு வாங்கவேண்டுமா? இன்று

காலமேகூட நான் உன்னிடம் வந்து விசாரிக்க வில்லையா? இச்சமயம் புரோகிதனுக்குத் திருநா ளல்லவா? நான் இனி அவ்விடத்திலேயே வாசமா யிருக்கிறேன்" என்று சொல்ல, அவள் மகிழ்ந்து போய்விட்டாள்.

9. வேலைக்காரி தன் தந்திரம் பலித்து விட்ட தென்று மகிழ்ந்து எஜமானியிடம் போய், "அம்மா! எல்லாக் காரியங்களையும் முடித்து விட்டேன்; நீங்கள் கவலைப் படவேண்டாம். இவ்விடம் அரண் மனைப் புரோகிதர் தவிர மற்றொருவரும் வரமாட் டார்கள். புரோகிதரோ நமக்கு வசப்பட்டவர். அதுவும் தவிர உங்களிடத்தில் உண்மையான பக்ஷம் உடையவர். அவரிடத்தில் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். அதாவது, 'ஆண் குழந்தை பிறந்திருக் கிறது. மூன்று வருஷம் ஒருவரும் பார்க்கக் கூடாது. அதற்கு மேல் ஒரு நல்ல நாளில் சுப முகூர்த்தத்தில் நவக்கிரக சாந்தி செய்துதான் பார்க்க வேண்டும்' என்று அரசனிடம் சொல்லும்படி திட்டஞ் செய்யவேண்டும். என் காரியம் முடிய மூன்று வருஷம் செல்லும். பிறகு உமக்கு க்ஷேமம் உண்டாகும்" என்று கூறினாள். அரசி மிகவும் பயந்தாள். வேலைக்காரி வெகு தந்திரமாக அவளைச் சமாதானப் படுத்தினாள். ஒருவாரம் கழிந்தபின் புரோகிதரிடத்தில் இந்தச் சங்கதியை அரசனுக்குத் தெரிவிக்கச் சொல்லி, அவருக்கு மகிழ்ச்சி யுண்டா கும்படி வஸ்திரம் திரவியம் முதலியன கொடுத்துத் திட்டஞ் செய்து அனுப்பிவிட்டுப் பிறகு தான் அரச னிடம் ஓட்டமாயோடி "மஹாராஜாவே! ஆண் குழந்தை பிறந்தது" என்று மகிழ்ந்து சொன்னாள்.

10. அரசன் அவளுக்கு ஆடை யாபரணாதிக ளுதவி மரியாதை செய்தான். புரோகிதர் அரசனைப் பார்த்து "மஹாராஜவே! இன்னம் மூன்று வருஷம் குழந்தையை நீர் பார்க்கக்கூடாது; பார்த்தால் மோசம் வரும். அதன் பின் நவக்கிரக சாந்தி செய்து தான் பார்க்க வேண்டும். அப்படிச் செய்தால் இந்தப் புத்திரன் பூலோகமுழுதும் அரசு செலுத்திச் சக்கரவர்த்தியாக இருப்பான். இல்லாவிட்டால் அற்பாயுசாய்ப் போய்விடுவான்" என்றார். அரசன் புத்திரனை உடனே பார்க்க முடியாமைக்குச் சற்று வருந்தி, "சரி, அப்படியே ஆகட்டும்; எப்படியாவது குழந்தை க்ஷேமமாயிருந்தால் அதுவே போதும்" என்று கூறி மகிழ்ந்திருந்தான். வந்தவர்களுக்கெல்லாம் பாக்கு, வெற்றிலை, சர்க்கரை வழங்கினான். ஏழைகளுக்கெல்லாம் அன்ன வஸ்திராதிகள் கொடுத்து அவர்களைக் களிப்பித்தான். தேவாலயங்களுக்கு உற்சவாதிகள் நடப்பித்தான். அவனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. நாடு நகரத்தில் உள்ள ஜனங்களெல்லாரும் பட்டமகிஷிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறதென்று கேட்டுத் திருவிழாக் கொண்டாடினார்கள். சிறைச்சாலையிலிருக்கும் அநேக குற்றவாளிகள் விடுதலையாய்த் தங்கள் குடும்பத்தில் வந்து கூடி மகிழ்ந்திருந்தார்கள். மந்திரி பிரதானிகள் படைத்தலைவர்கள் எல்லாரும் உள்ளங் களித்தார்கள். இளையாளுக்கு மாத்திரம் அன்று உண்டான துக்கத் துக்கு எல்லையேயில்லை; என்ன செய்வாள் பாவம்! "இனிமேல் நமது வாழ்வு குன்றிப்போயிற்று. மூத்தாள் பட்டத்துக்குரிய புத்திரனைப் பெற்று எடுத்துக் கொண்டாள். உலகமுழுதும் அவளது ஆதீனத்

திற்குள் ஆய்விட்டது; புத்திர னில்லாமையால் தானே, என்னை அரசன் விவாகம் செய்துகொண்டது. அந்தப் பாக்கியம் எனக்கில்லாமற் போயிற்று. அரசன் என்மேல் பிரியமாயிருக்கிறானென்று இறுமாப்புக்கொண்டு அவளைக் காட்டில் குடியோட்டி வைத்தேன். இனி எனக்கு அந்தக்கதி வந்துவிடும்" என்று பலவாறாக நினைந்து மனதுக்குள்ளே துக்கித்துக் கொண்டு வெளிக்குச் சந்தோஷமுள்ளவள் போல அபிநயம் காட்டிக்கொண்டிருந்தாள். வருஷம் மூன்றாயிற்று. அரசன் புரோகிதரை அழைத்து "மூன்று வருஷமாய் விட்டதே! புத்திரனை பார்த்து அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டுமே! அதற்குத்தகுந்த முகூர்த்தம் வைத்துக்கொண்டு வாருங்கள்; நாம்போய் அழைத்து வருவோம்" என்றான். புரோகிதர் வேலைக்காரியின் போதனையால் "நாம் அங்கே சென்று பார்க்கக்கூடாது. இராஜபுத்திரனைக் காட்டிலுள்ள அற்பக் குடிசையிலா வைத்துப் பார்க்கிறது? நான் முகூர்த்தம் வைத்துக் கொண்டு வருகிறேன். அந்த நாளில் குழந்தையையும் அதன் மாதாவையும் அரண்மனைக்கு அழைத்து வந்துவிட்டால் இங்கேயே எல்லாம் செய்துகொள்வோம்" என்றார். அரசன் சம்மதித்தபடியால் புரோகிதர் வீடு போய்விட்டார்.

11. பின் புரோகிதர் ஸ்ரீ மந்தினியின் வேலைக்காரியோடு கலந்து பேசிக்கொண்டு பத்தாவது நாள் அவர், பகல் பதினைந்து நாழிகைக்கு முகூர்த்தம் வைத்து அரசனுக்குத் தெரிவித்துப் போய்விட்டார். அரசன் குழந்தைக்கு மாணிக்கத்தாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்ட சட்டைகளையும், ஆப

ரணங்களையும் வேலைக்காரி வசமாக அனுப்பி அதற்கு அலங்காரம் பண்ணிக்கொண்டு வரக் கட்டளையிட்டான். அவளும் அவைகளை வாங்கிக்கொண்டு வந்து தன் எஜமானிக்குக் காட்டினள். அவள் வயிறெரிந்து "பாதகீ! என்னை முழுவதும் கெடுத்து விட்டாயே! இப்பொழுது நானென்ன செய்வேன்" என்று புலம்பினள். வேலைக்காரி அவளைத் தேற்றி "நான் சொன்னபடி கேளும்; குறை யொன்றும் வாராது; பயப்பட வேண்டாம்; நான் உமக்கு மூன்று வயதுக் குழந்தை தருகிறேன்" என்று தைரியப்படுத்தினள். அதனால் ஸ்ரீமந்தினி சற்றுத் திருப்தி அடைந்திருந்தாள். ஒன்பதாம் நாளில் ஒரு கல எள்ளை நனைத்து ஊறவைத்துத் தோல் போகக்கழுவி வெள்ளையாக்கி, அதனோடு சர்க்கரை கலந்து இடித்துச், சுக்கு ஏலம் முதலியவை பொடித்துப் போட்டுப் பிசைந்து, ராத்திரியே மூன்று வயதுள்ள இளங் குழந்தைபோல்ஒரு பதுமை செய்து வைத்து விட்டாள். அது ஒரு அழகிய குழந்தை போலவே காணப்பட்டது; உயிருள்ளது போலத் தோற்றியது. ஸ்ரீமந்தினி கண்டு வியந்து 'இது என்னடீ!" என்று கேட்க அவள் 'பிறகு சொல்கிறேன், நீர் மாத்திரம் வாய் திறவாமலிரும்; நானெல்லாம் செய்து கொள்ளுகிறேன்" என்று சொல்லி அவளை அடக்கிவிட்டாள். அவள் ஆனதாகட்டுமென்று தைரியங்கொண்டு துணிந்திருந்து விட்டாள்.

12. மறுநாள் பத்து நாழிகைக்கெல்லாம் அரண்மனையிலிருந்து பல்லக்கு மேளதாளம் முதலிய வாத்தியங்களோடு, அமைச்சர் முதலிய பரிவாரத்தார் ஸ்ரீமந்தினி வீடுவந்து சேர்ந்தார்கள். வேலைக்காரி

அந்த எள்ளுப் பொம்மைக்கு உடுப்புகளும் ஆப ரணங்களுமிட்டு அலங்கரித்து, ஸ்ரீமந்தினியையும் அலங்கரித்து அழைத்துக்கொண்டு வந்து பல்லக்கி லேற்றித் தானும் கூட ஏறி உட்கார்ந்து கொண்டாள். மங்கள வாத்திய கோஷத்தோடு யாவரும் புறப்பட் டார்கள். நடுவழியில் வரும்போது ஸ்ரீமந்தினிக்குப் பயத்தினால் மலபாதையுண்டாயிற்று. இதை வேலைக் காரியிடம் தெரிவிக்க, அவள் பல்லக்கை நிறுத்தச் சொல்லி, இராணியையும் குழந்தையையு மிட்டுக் கொண்டுபோய், அங்கிருந்த கிராம தேவதை கோவி லில் பொம்மைக் குழந்தையை வைத்துவிட்டு, ஸ்ரீமந் தினியை மலோபாதைக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டாள். இதற்குள் அந்தக் கிராம தேவதை, எள்ளுப்பொம்மையின் வாசனையினால் வாயில் ஜலம் ஊற, அதில் கொஞ்சம் பிட்டுத்தின்று பார்க்க வெகு ருசியாயிருந்தமையால், முன்பின் யோசித்துப் பாரா மல் அதை முற்றுந் தின்று விட்டு ஏப்பமிட்டுக் கொண் டிருந்தது. ஸ்ரீமந்தினியும் வேலைக்காரியும் வந்து பார்க்கும்போது பொம்மையைக் காணோம். அரா சிக்குத் திகில் பிடித்தது; புலம்ப ஆரம்பித்தாள். வேலைக்காரி, அவளைப்பார்த்து, 'அம்மா! பயப்படா தேயும்; இதோ புத்திரனை அழைப்பிக்கின்றேன். இல்லாவிட்டால் இந்தப்பிடாரி கோவிலை யிடித்துத் தள்ளிப் பிடாரியையும் சிறை செய்கிறேன்' என்று சொல்லிப், பிடாரியைப்பார்த்து "ஓ கிராமதேவ தையே! உன்னை இங்கே எதற்காக வைத்துப் பூசை போடுகிறது? ஊரைக் காப்பதற்கல்லவோ? அரச னுடைய அருமையான புத்திரனையே தின்று விட் டாயே! நீ வேறென்ன செய்யமாட்டாய்! அரசன்

வெகுநாள் தவமிருந்து பெற்ற பிள்ளையாயிற்றே! இப்பொழுது அந்தக் குழந்தையைக் கொண்டுவந்து கொடு; இல்லாவிட்டால் உன் கோவிலையும் இடித்து, உன்னையுஞ் சிறையிட்டு விடுவேன். உனக்குப் பூசை மண் தான். என்ன சொல்லுகிறாய்? சீக்கிரம்சொல், இதோ போய் என் மாமன் வல்லிடிராயனைக் கூட்டி வந்து உன் வாயில் மண் போடுகிறேன்" என்று உரத்துக் கூவினாள்.

13. அதுகேட்ட பிடாரி, "என்னடீ! எள்ளுப் பொம்மை யல்லவோ வைத்திருந்தது. எனக்கு யாராவது படைத்தார்களாக்குமென்று கருதி நான் தின்று விட்டேன்" என்றது. "ஆ! ஆ! என் குழந்தை உனக்கு எள்ளுப் பொம்மையாய்விட்டதா? அப்படியா? உனக்கு அவ்வளவு அகங்காரமா? வல்லிடிராயனை அழைத்தாலன்றி நீ வழிக்கு வர மாட்டாய்" என்று சொல்லி 'ஆரடா காவற்காரா?' என்றவுடனே பிடாரி பயந்து "நாம் தப்பு செய்து விட்டோம்; வல்லிடிராயன் வந்தால் வாயில் மண் போட்டுவிடுவான். அவன் எத்தனையோ கிராம தேவதைகளைத் தன் மந்திரவல்லமையால் கட்டிச் சிறை வைத்து வேண்டியபடி வேலைவாங்குகிறான். நமக்கும் அந்தக் கதிவரும்" என்றெண்ணி "அம்மா! நீ அந்த மந்திரவாதியைக் கூப்பிடாதே; என் கோவிலுக்குப் பின்னால் மூன்று வயதுள்ள ஒரு குழந்தையின் எலும்புக்கூடு கிடக்கிறது. அதை எடுத்துக் கொண்டு வா! அதை உயிர்ப்பித்துத் தருகிறேன்" என்றாள். வேலைக்காரி உடனே போய் அதைக்கொண்டு வந்து கொடுக்கப், பிடாரி அதற்கு உயிர் உண்டாக்கித், 'தீர்க்காயுசாய் மன்மதனைப்போல அழகுள்ளவனாக

வும், வீரபராக்கிரமசாலியாகவும், நீதிபுரியும் செங்கோல் வேந்தனாகவும் இருந்து வாழ்க என்று ஆசீர்வதித்துக் கொடுத்து அனுப்பினாள். வேலைக்காரி அதற்கு உடுப்புகளும் ஆபரணங்களும் பூட்டி எஜமானியிடம் கொடுக்க, அவள் மனதுக்கடங்கா மகிழ்ச்சியோடு வாங்கிமடிப்பில் வைத்துக்கொண்டு வந்து பல்லக்கிலேறினாள்.

14. வேலைக்காரியுங்கூட ஏறிப்போனாள். பிறகு யாவரும் மகிழ்ச்சியுடன் அரண்மனைபோய்ச் சேர்ந்தார்கள். இராஜன் எதிர்கொண்டு வந்து அவர்களை அழைத்துக் கொண்டு உள்ளேபோய்ச் சாந்தி முதலியவை செய்து குழந்தையைக் கொஞ்சிச் சீராட்டி, மனைவியைத் தழுவி அணைத்து முத்தமிட்டு, "நானுனக்குச் செய்த குற்றத்தை மறந்து விடு; இனிஉலகம் முழுவதும் உன்னுடையதே! உன் சக்களத்திக்கு நீ விரும்பிய தண்டனையைச் செய்து கோபந்தணி" என்று உத்தரவளித்தான்.

15. ஸ்ரீமந்தினி "சுவாமி! என் தலைவிதியை நான் அனுபவித்தேன். அவள் என்ன செய்வாள்? அவளைத் தண்டிக்க எனக்குப் பிரியமில்லை. அவள் சுகமாக இருக்கட்டும்" என்று சொல்லி அவளை ஆதரித்தாள். பிறகு எல்லோரும் கூடி மகிழ்ந்து நீடூழி வாழ்ந்தார்கள்.

எள்ளுப்பதுமைக் கதை முற்றிற்று.

நான்காவது

# சௌந்தரி என்னும்

# வணக்கமுள்ள ஏழைப் பெண் கதை.

---

ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவனுக்கு நான்கு காணி நிலம் இருந்தது. அதை வைத்துக்கொண்டு செட்டாக அவன் குடித்தனம் பண்ணி வந்தான். அவனுக்கு இல்லறத் துணைவியாகிய முத்து என்பவள், நற்குண நற்செய்கையுடையவள்; கணவன் மனதுக்கிசைந்தபடி நடக்கும் இயல்புள்ளவள். இராமன் என்கிற அந்தக் குடியானவனுக்கு வரதன் என்கிற ஒரு தம்பியுண்டு. இவர்களெல்லாரும் ஒரே குடும்பமாய் வாழ்ந்து வருகையில் வரதனுக்குக் கல்யாணம் நடந்தது. வரதன் அதிகப் புத்தி கூர்மையில்லாதவன்; குடித்தனப் பாங்கறியாதவன்; எல்லாவற்றையும் தமையன் ஆளுகையில் விட்டு அவன் சொன்னபடி கேட்டு நடந்து கொண்டிருந்தான். விவாகம் ஆன பிறகு பெண்டாட்டி பேச்சே பெரிதாயிற்று. அவள் கட்டளையை மீறி நடக்கமுடியாமல் போயிற்று. அந்தப் பெண்ணோ பொறுமை, கோபம் முதலிய துர்க்குணமுள்ளவள். அவள் தன் கணவனை அலட்டித் தனிக் குடித்தனம் செய்யத் தூண்டிக் கொண்டிருந்தாள். அதனால் வரதன் தமையனிடத்திலிருந்து தன் பாகமாகிய இரண்டு காணி நிலத்தையும் பிரித்துவாங்கிக்கொண்டு தனிக்குடித்தனம் பண்ணத் தொடங்கினான். தனிக்

குடித்தனம் செய்தாலும் தமையனுக்கு அடங்கி அவன் சொற்படி நடந்து வந்தான்.

2. இப்படி இருக்கையில் வரதனுக்கு இரண்டு பெண்களும் ஒரு பிள்ளையும் பிறந்தன. மூத்தவனுக்கு ஒன்றுமில்லை. கடைசியாகத் தெய்வகடாட்சத்தால் முத்து ஒரு பெண்ணைப் பெற்றாள். பெண் பிறந்து ஆறு மாதத்திற்கெல்லாம் முத்து இறந்து போனாள். இராமன் தன் அருமைக் குழந்தைக்குச் சௌந்தரி என்று பேரிட்டு வெகு செல்வமாக வளர்த்து வந்தான். அந்தக் குழந்தைக்கு ஐந்து வயதாகும்போது இராமனுக்கு மரணகாலஞ் சமீபித்துவிட்டது. இராமன் அதையறிந்து தன் தம்பியை அருகில் அழைத்து, இந்தக் குழந்தையைப் பாதுகாத்துத் தகுந்த பருவத்தில் விவாகமுஞ் செய்வித்துத் தன் பங்காகிய இரண்டு காணிகளையும் அப்பெண்ணுக்குக் கொடுக்கும்படி சொல்லிச் சிவபதமடைந்தான்.

3. தமையன் இறந்துபோன பின் வரதன் தன் தமையன் மகளை வெகு அன்பாய் ஆதரித்துவந்தான். அவளுடைய சிறிய தாயாரும் அவளுடைய மக்களும் சௌந்தரியைப் பகைத்து அவளை மிகவும் இழிவாக நடத்தி வந்தார்கள். சௌந்தரியோ சிறியதாயாரும் அவளுடைய மக்களும் தனக்குச் செய்யும் உபத்திரவத்தைச் சிறிய தகப்பனிடஞ் சொல்லாமல் மனதுக்குள்ளேயே அடக்கிக்கொண்டு வந்தாள். நாளுக்கு நாள் துன்பம் மேலிட்டது. சௌந்தரி தன் சிறிய தாயாருக்கும் அவளுடைய மக்களுக்கும்அடிமையாய் விட்டாள். வீட்டு வேலைகளெல்லாம் அவளே செய்ய வேண்டும். கேணி குளங்களி லிருந்தும் தண்ணீர்

கொண்டுவந்து நிரப்பவேண்டும். சிறிய தாயார் முத லியவர்களுடைய வஸ்திரங்களைத் தோய்க்கவேண்டும். நெல் குத்தவேண்டும். சாணி துகைத்துத் தட்ட வேண்டும். மாடுகளைக் குளிப்பாட்டி மேய்த்துக் கட்டவேண்டும். எல்லாரும் எழுந்திருக்கு முன் எழுந்திருந்து வீட்டு வேலைசெய்யத் தொடங்க வேண்டும். யாவரும் இரவில் படுத்துக்கொண்டபின் அவள் படுக்கவேண்டும். வேலைகளில் ஏதேனும் தவறினால் அவளுடைய சிறியதாயார் விளக்குமாறு, தடி முதலியவற்றால் நொறுக்கிவிடுவாள். சிறிய தாயாருடைய மக்களும் நினைத்தபடி அடித்து வை வார்கள். இதனால் சௌந்தரிக்குச் சகிக்க முடியாத துன்பமாயிற்று; வயிறு நிறையச்சோறு கிடையாது; உடுக்க நல்ல துணியில்லை.

4. இப்படியாக இவள் கஷ்டப்பட இவளுடைய ஆஸ்தியை வைத்துக்கொண்டு சிறிய தாயாரும் அவ ளுடைய குழந்தைகளும் வெகு சம்பிரமாய் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் இப்படிச் செய்வதை யாரோ அயலான் ஒருவன் வரதனுக்குச் சொன்னான். அதைக் கேட்ட வரதன் வீட்டுக்குப்போய்த் தன் மனைவியையும் குழந்தைகளையும் அழைத்து "நீங்கள் சௌந்தரியைக் கஷ்டப்படுத்துவதாகக் கேள்விப்படு கிறேன். உங்களால் எனக்கு அபவாதம் நேரிட்டது. ஊரில் எல்லாரும் என்னை யேசுகின்றார்கள். நீங்கள் இனி யிப்படிச் செய்யலாகாது" என்று கண்டித்தான். இதைக் கேட்ட சிறிய தாயாரும் அவள் குழந்தைகளும் சௌந்தரி தான் ஊரிலுள்ள வரிடம் சொல்லி விட்டாள் என்று நினைத்து, முன்னமிருந்ததை விடப் பத்துமடங்கு அதிகமாக

அவளிடம் பகைகொண்டு துன்பப் படுத்தினர்கள். ஒருநாள் வரதன் வயல் பார்க்கப்போனபின், சிறிய தாயாரும் மற்றவர்களும் சௌந்தரியை அழைத்து 'நீயேன் எங்கள்மேல் அவதூறு சொல்லிக்கொண்டு திரிகிறாய்? ஊரிலெல்லோரும் எங்களைப் பழிக்கிறார்களே?' என்று அதட்டிக்கேட்க சௌந்தரி "நான் ஒன்றும் அறியேன்; எனக்குப் பிறரோடு பேச நேரமிருக்கிறதோ? காலைமுதல் இரவு படுக்கிற வரையில் வேலை சரியாயிருக்கிறதே; நான் ஒருவரிடத்திலும் பேசவும் இல்லை; உங்களைக் குறைகூறவுமில்லை" என்றாள். "நான் என் குழந்தைகளுக்குக்கூட வயிறு நிறையச் சோறுபோடாமல் உன் இழவுக்குக் கொட்டுறேனே? உனக்கு வீட்டில் என்ன வேலையிருக்கிறது? நானும் என் மக்களும் வீட்டுவேலை எல்லாவற்றையும் செய்கிறோமே; இப்படியிருக்க, காலை எழுந்ததுமுதல் படுக்கிறவரையும் வேலை செய்கிறேனென்று சொன்னையே! இப்படித்தான் ஊரிலும் பழிதூற்றியிருப்பாய்" என்று எலும்பு நொறுங்கும் வரை அவளை நன்றாய்ப் புடைத்து, 'இனி இங்கே இருக்கக்கூடாது; எங்கேயாவது போய்விடு. என் கண்ணுக்கெதிரில் இருந்தால் உன்னைக்கொன்று போடுவேன்" என்று வைதுதிட்டிக் கழுத்தைப்பிடித்து அவளைத் தள்ளிக்கொண்டு வந்து வெளியில் விட்டுக் கதவையடைத்துக்கொண்டு போய் விட்டாள். சௌந்தரி ஒருநாளும் இந்த அடிபட்டதில்லை. அடிபட்டதனல் பேசவும் நடக்கவும் முடியாமல், மெதுவாக ஊருக்கு வெளியிலே போய்ஒரு மரத்தின் நிழலில் சற்றுநேரம் படுத்துக்கொண்டிருந்தாள். பசியும் களையும் மிகுதியாக இருந்தபடியால் அயர்ந்து தூங்கிவிட்டாள்.

5. சாய்ங்காலம் அஸ்தமன வேளையில் விழித்துக்கொண்டு பார்த்தாள். அங்கு மனித சஞ்சாரமே கிடையாது. வெகு பயங்கரமா யிருந்தது. பட்சிகளெல்லாம் கூவின. நரிகள் முதலிய துஷ்டமிருகங்கள் ஊளையிட்டன. காற்றடிப்பதனால் மரங்கள் எல்லாம் விறுவிறென்று சப்தித்தன. சௌந்தரிக்கு நடுக்கமுண்டாயிற்று. பசி பொறுக்க முடியவில்லை. என் செய்வாள் பாவம்! ஒன்றுந் தோன்றாமல் மயங்கிக் கிடந்தாள். கொஞ்சநேரம் பொறுத்துக் கொஞ்சம் துணிவு பிறந்தது. எப்படியும் ஆபத்து நேர்ந்துவிட்டது. கடவுள் கருணை கூர்ந்து இரட்சித்தா லல்லாமல் வேறு மார்க்கமில்லை யென்று தீர்மானித்துக் கொண்டாள். வந்தது வரட்டும், சற்று உலாவித் திரிவோம். ஏதாவது தின்னக்கூடிய இலை சருகாவது கிடைத்தால் இன்று பசியாறிய பின்பு யோசித்துக் கொள்ளலாம் என்று தைரியங்கொண்டு எழுந்திருந்து கொஞ்சதூரம் நடந்துபோனாள். அவ்விடத்தில் ஒரு கொய்யா மரமிருந்தது. அது நிறையப் பழுத்திருக்கக்கண்டு அதன் மேல் கஷ்டப்பட்டு ஏறிச் சில கனிகளைப் பறித்துத் தின்று, பக்கத்திலிருந்த ஒரு குட்டையில் இரண்டு கைத் தண்ணீர் அள்ளிக் குடித்துவிட்டு, மறுபடியும் அந்த மரத்தின் மேலேறி உட்கார்ந்து கொண்டாள். இரவெல்லாம் நரி யூளையும், செந்நாய் கோநாய்களின் குரைப்பும், சிங்கம் புலிகளின் கர்ஜனையும், யானைகளின் பேரொலிகளுமாக இருந்தபடியால் நித்திரை பிடியாமலிருந்தாள். மறுநாள் உதயமானதும் மரத்தை விட்டுக்கீழிறங்கி மனம் போன திக்குநோக்கி நடந்து போனாள். மந்தி

யான வேளையாயிற்று. வெய்யிலால் வாடிக்களைத்து நடக்கமுடியாமல் நடந்து போனாள்.

6. அங்கேயொரு முடக்குதிரை கொஞ்சமும் நடக்க முடியாமல் வெய்யிலால் பரதவித்துக் கொண்டிருந்தது. அது அவளை "அம்மா! எனக்குக் கால்நடக்க முடியாது; கண்ணும் நன்றாய்த் தெரியாது; புல்லுந் தண்ணீருமுள்ள இடத்தில் என்னைக் கொண்டுபோய் விட்டால் உனக்குப் புண்ணிய முண்டாகும். சமயம் நேரிட்டபோது என்னாலான உபகாரத்தை உனக்குச் செய்வேன்" என்றது. அவள் இரங்கி அப்படியே அதை அழைத்துக் கொண்டுபோய், புல்லுந் தண்ணீரும் நிழலு முள்ள ஓர் இடத்தில் விட்டு அப்பால் போனாள். அவ்விடத்தில் ஒரு வாய்க்கால் ஓடியது. அதில் சில எறும்புகள் மிதந்து வந்தன. அவற்றுள் ஒரு பெரிய எறும்பு "அம்மா! என்னைக் கரையில் எடுத்துவிட்டால் சமயம் வந்தபோது என்னாற் கூடிய உபகாரம் செய்வேன்" என்றது. அப்படியே அதைக் கரையில் எடுத்துவிட்டு அப்பால் போனாள். கொஞ்ச தூரம் போனதும் அங்கே ஒரு எலி சிறிய பள்ளத்தில் விழுந்து கரையேறமாட்டாமல் தவித்துக் கொண்டிருந்தது. அது அவளை நோக்கி "அம்மா! என்னைக் கரைமே லெடுத்து விட்டால் உனக்கு நல்ல சமயத்தில் உபகாரம் பண்ணுவேன்" என்றது. அப்படியே அதை எடுத்துவிட்டு அப்புறம் போனாள். சிறிதுதூரம் சென்றவுடன் ஒரு சிற்றாறு ஓடியது. அது அவளைக்கூப்பிட்டு "அம்மா! என்பேர் பவள ஆறு. என்னைக் கலக்காமல் போனால் உனக்கு வேண்டியபோது கலப் பவளந்தருவேன்" என்றது. அவ்வாறே கலக்காமல் மெதுவாக நடந்து அதைத் தாண்டி

அப்பால் போனாள். அவ்விடத்தில் மூத்தாறு என்று ஒருசிற்றாறு இருந்தது. அது "அம்மா! நீ என்னைக் கலக்காமற்போனால் உனக்குக் கலமுத்துத்தருவேன்" என்றது. அப்படியே கலக்காமல் நடந்து கரை தாண்டிப் போனாள். அங்கே ஒரு பொன்னாறு இருந்தது. அதுவும் அப்படியே சொல்லிற்று. அதையும் கலக்காமல் போனாள். அவ்விடத்தில் ஒரு மரத்தின்கீழ் ஒரு கிளிக்குஞ்சு விழுந்து கிடந்தது. அது "அம்மா! எனக்கு இன்னம் இரக்கைகூட முளைக்கவில்லை. நான் மரத்தின் மேலுள்ள கூட்டில் நின்று தவறி விழுந்து விட்டேன். என்னைக் கூட்டில் எடுத்துவிட்டால் உனக்கு நல்ல சமயத்தில் உதவி செய்வேன்" என்றது. அப்படியே அதைக் கையிலெடுத்துக்கொண்டு, சிரமத்தைப் பாராமல் மரத்தின் மேலேறிக் கூட்டில் விட்டாள்.

7. அஸ்தமித்தது; இருள் சூழ்ந்தது; இரவெல்லாம் அந்த மரத்திலிருக்க நேரிட்டது. அப்பொழுது தாய்க்கிளிவந்து கூட்டில் நுழைந்தது. குஞ்சு நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லக் கேட்டு, அந்தக்கிளி சௌந்தரியைக் கூப்பிட்டு "நீ பயப்படாதே! உனக்குச் சிறிது ஆகாரம் தருகிறேன்" என்று கூறிச் சில கனிகள் கொண்டுவந்து கொடுத்தது. இவள் அதைப் புசித்து அம்மரத்திலேயே இரவு தங்கினாள். விடிந்ததும், அந்தக்கிளி சௌந்தரியைப் பார்த்து, "அம்மா! இப்படியே நேரக் கீழ் முகமாய்ப் போனால் அங்கே ஒரு மாளிகை தோன்றும். அதில் ஓர் அம்மையார் தவசு பண்ணிக் கொண்டிருக்கிறார். அவரிடம் போய்ச் சேர்ந்தால் உனக்கு க்ஷேமம் உண்டாகும்" என்று கூறியது. அதே பிரகாரம் சௌந்தரி, அங்கே

போய்ப் பார்க்க ஓர் அம்மையார் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருக்குச் சமீபம் போய் நமஸ்காரம் செய்தாள்.

அந்த அம்மையரார் உபசாரஞ் சொல்லி உட்காரச் செய்து சற்றுப் பேசிக்கொண்டிருந்து "அம்மா! நாழிகையாயிற்று. நீயோ பத்து வயதுள்ள சிறு பெண்ணாயிருக்கிறாய். பல்லுத் தேய்த்துப் பழைய அமுது உண்ணு" என்றாள். சௌந்தரி "அப்படியே உண்கிறேன்" என்றாள். அம்மையார் "உனக்குப் பல் தேய்க்கச் சுகந்தப் பொடி தரவோ? செங்கற் பொடி தரவோ?" என்றாள். சௌந்தரி "எனக்குச் செங்கற் பொடி போதும்" என்றாள். அம்மையார் நல்ல சுகந்தப் பொடி தந்தாள். பல் தேய்த்தபின் அம்மையார் "அம்மா! உனக்குத் தயிரும் பழையதும்போடவோ? நீருஞ்சோறும் போடவோ?" என்றாள். சௌந்தரி எனக்கு நீரும் சோறும் போதும்" என்றாள். கட்டித் தயிரும் சோறும் பலவகை ஊறுகாய்களும் இட்டு உண்ணச் சொன்னாள். பிறகு மத்தியானமானதும் அம்மையார் "அம்மா! நீ குளித்துவா; குளிப்பதற்குப் பசுமஞ்சள் கொடுக்கவோ? கோரைக் கிழங்கு தரவோ?" என்றாள். சௌந்தரி "கோரைக் கிழங்கு கொடுத்தாற் போதும்" என்றாள். நல்ல பசுமஞ்சள் கொடுத்தாள். குளித்தபின் "உனக்கு பட்டு வஸ்திரந்தரவோ? கந்தற் சேலை தரவோ?" என்றாள். சௌந்தரி "கந்தற் சேலை கொடுத்தால் போதும்" என, நல்ல பட்டுச்சேலை கொடுத்தாள். பின் சிறந்த போஜனமிட்டு அவளைத் தன்னிடம் பணிவிடைப் பெண்ணாகவைத்துக்கொண்டு அவளுக்கு யாதொரு குறைவுமில்லாமல் நடத்தி வந்தாள்.

இப்படியாக மூன்று வருஷங்களாயின. இது வரைக்கும் செளந்தரி அம்மையாருக்கு யாதொரு மன வருத்தமும் நேரிடாமல் நடந்து கொண்டாள். அம்மையாருக்கு அவளிடத்தில் அளவில்லாதமகிழ்ச்சி உண்டாயிற்று. ஒருநாள் அம்மையார் செளந்தரியைப்பார்த்து "அம்மா உன் பணிவிடைக்கு மகிழ்ந்தேன். இனிமேல் நீ வேண்டிய இடத்துக்குப் போகலாம். உனக்கு ஒரு குறைவும் வராது; வெகு க்ஷேமமாய் வாழ்வாய்; நீ ஒன்றுக்கும் அஞ்சாதே போ! உன்னை ஓர் இராஜகுமாரன் மணம்புரிவான்" என்று கூறி, ஒரு பட்டு வஸ்திரம் கொடுத்து, உனக்கு மிருகங்களாலும், பேய் பூதங்களாலும், திருடர்களாலும் பயம் நேரிடாது" என்று சொல்லி அனுப்பினாள்.

செளந்தரி அம்மையாரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டுத் தான் வந்த வழியாகவே திரும்பிவந்து, கிளிக்குஞ்சுக ளிருந்த மரத்தண்டை வந்து நின்றாள். அதன்மே லிருந்த கிளி அவளைப் பார்த்து "நீ இனிமேல் சுகப்படுவாய்; உனக்குப் பசி உண்டானபோது என்னை நினைத்துக்கொள்; உன் னிஷ்டம்போல வேண்டிய ஆகாரம் உனக்கெதிரில் வந்திருக்கும்" என்று சொல்லி அனுப்பியது. அங்கிருந்து புறப்பட்டுப்போய் பொன்னாற்றி னருகில் வந்தாள். பொன்னாறு அவளை நோக்கி "செளந்தரி! நான் உனக்குக் கொடுத்த கலப்பொன்னும் இப்பொழுது பதிங்கலப் பொன்னா யிருக்கிறது. நீ நினைத்த இடத்தில் வந்து சேரும் போ" என்றது. பின் முத்தாற்றின் சமீபத்தில் வந்தாள். அதுவும் அப்படியே சொல்லிற்று. அதைத் தாண்டிப் பவள

ந்தியண்டைவந்தாள். அதுவுமப்படியே சொல் லிற்று. அதையுந் தாண்டி எலியிருந்த இடம் வந்து சேர்ந்தாள். எலி, அவளுக்கு உபசாரஞ்செய்து "நீ நினைத்தவிடத்தில் வந்து உதவி செய்கிறேன்" என்றது. பிறகு, இவள், தான் நீரிலிருந்து எடுத்து விட்ட எறும்பின் வளையருகே வந்தாள். எறும்பு அவளை மரியாதையாய் ஏற்றுக்கொண்டு "நீ நினைத்த போது வந்து உதவுகிறேன்" என்றுகூறி யனுப்பி யது. பின் குதிரை யிருந்த காட்டுக்கு வந்தாள். குதிரை அவளை யெதிர் கொண்டழைத்து உபசரித்து, "அம்மா! நீ நினைத்தபோது வந்து உபசரிக்கின் றேன். அதோ இருக்கிற பஞ்சகல்யாணிக் குதிரை மேலேறிக்கொண்டு போ!" என்று சொல்லி யனுப் பிற்று.

பிறகு சௌந்தரி தன் ஊரின் அருகில் வந்து நின்றுகொண்டு இனியென்ன செய்கிறதென்று யோ சித்துக்கொண்டு மதிமயங்கிக் கிளியை நினைத்தாள். கிளி அந்த க்ஷணத்திலே எதிர்வந்து நின்று "ஏன் என்னை அழைத்தாய்?" என்றது. சௌந்தரி, "நான் ஊரின் கிட்டவந்து விட்டேன். இனிமேல் என்ன செய்கிறது? ஒரு யுக்திசொல்ல வேண்டும்" என்றாள். கிளி, "சௌந்தரி! நீ அம்மையாரை நினைத்துக் கொண்டு இங்கே ஒரு மாளிகை உண்டாக வேண்டு மென்று நினை" என்றது. அப்படியே நினைக்க, அவ் விடத்தில் தேவரும் ஆச்சரியப் படும்படியான ஒரு திவ்விய மாளிகை உண்டாயிற்று. அதைக்கண்டு சௌந்தரி மகிழ்ந்து, கிளியைப் பார்த்து "இனி என்ன செய்வ" தென்றாள். "எலியை நினைத்தால் அது வரும்; அது வந்தவுடன் மாளிகைக்குவேண்டிய

வஸ்துக்கள் வேண்டுமென்று கேள்" என்றது. அப்படியே எலியை நினைத்தவுடன் அது வந்து "என் என்னை அழைத்தாய்?" என்று கேட்டது. "இந்த மாளிகையை உசித வஸ்துக்களால் நிரப்பவேண்டும்" என்றாள். உடனே அது மாளிகையைச் சகல வஸ்துக்களாலும் நிரப்பிற்று. பின் கிளியின் உத்தரவினுல் எறும்பை நினைக்க, அது வந்து அந்த மாளிகையைச் சகலதானிய தவசங்களாலும் நிரப்பிற்று. அதன்பிறகு சௌந்தரி கிளியைப்பார்த்து "இனி என்ன செய்கிறது" என்றாள். கிளி "என்னை உன் கையால் தூக்கிப் பூமியில் ஓங்கி அடி" என்றது, அவள் மயங்கி நிற்க, அது வற்புறுத்திக் கூறிற்று. பின், அது சொன்னபடியே கிளியைத் தூக்கிப் பூமியில் அடித்தவுடன், அது மன்மதனைப்போல வடிவழகுள்ள யௌவன இராஜ குமாரனாக ஆயிற்று. அவனைக்கண்டவுடன் சௌந்தரி திடுக்கிட்டு 'இது என்ன விந்தை!' என்று அதிசயித்து நின்றாள். அரச குமாரன் சௌந்தரியைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு "பயப்படாதே! நானிந்தத் தேசத்து இராஜகுமாரன்; இராஜ்யத்து ஜனங்கள் எல்லாரும் மஹா பாபிகளா யிருந்தார்கள். நான் மிகச் சிறுவனா யிருந்தேன்; அதோ இருக்கிற மலைமேலிருந்து ஒரு தேவதை வந்து இந்நாடு காடாகும்படி சபித்து விட்டது. என் மந்திரி, படைத்தலைவர் சேனைகளெல்லாரும் எலியுங் குதிரையும், எறும்புமானார்கள். என் தாயார் புண்ணியவதியானபடியால் அவள் வேண்டிக்கொண்டபோது, நீ இந்த இராஜ்யத்தின் முடிவிலிருக்கிற மாளிகையிலிருந்து தபசுபண்ணு; சௌந்தரி என்னும் ஒரு பெண் இந்த வனத்தில் வருவாள். அப்

போது இவ்வளம் மறுபடியும் நாடாகும். அவளை உன் மகனுக்கு மணம்புரிவித்துச் சுகமாக வாழ்ந்திரு' என்று கூறிப்போய் விட்டது. இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் என் தாயார் வருவாள். அவள் வந்ததும், இந்தக் காடு நாடாகும்" என்றான். உடனே அவன் தாயார் வந்தாள். வந்ததும் அவ்வனம் சிறந்த நாடாயிற்று. மந்திரி பிரதானிகளெல்லோரும் வந்து சேர்ந்தார்கள். அரச குமாரன் சௌந்தரியை மணம்புரிந்து கொண்டான். இருவரும் சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் இரவில் இராஜகுமாரனும் சௌந்தரியும் மேல் மாடியில் உட்கார்ந்து உல்லாசமாய்ப் பேசிக் கொண்டிருக்கும் போது, இராஜ குமாரன், "உன்வரலாற்றைக்கேட்க விரும்புகிறேன்" என, அவள் கண்களில் நீர் பெருக, மொழிதடுமாற, நாக்குளற "அதைப் பற்றி என்னைக்கேட்காதிருக்கப் பிரார்த்திக்கின்றேன்" என்று வணக்கமாய்ச் சொன்னாள். இராஜன் அவளைச் சமாதானப்படுத்தி, "என்னுருயிரே! அநேக வருஷ காலம் கிளியா யிருந்த என்னைமீட்டு, இவ்வளவு பெரிய போகாநுபவம் தந்த உனக்கு நான் செய்ய வேண்டிய உபகாரம் கரையில்லாதது. நீ சொல்ல வேண்டு மென்பது இல்லை; எல்லாம் எனக்குத் தெரியும். உன் வாயாலேகேட்க வேண்டுமென்று விரும்பினேனேயல்லது வேறில்லை" என்று கூறினன். பின்பு சௌந்தரி தன் கணவனை வணங்கி "சுவாமி! புழுக்கை வேலைசெய்துகொண்டு நரகாவஸ்தை யனுபவித்துக்கொண்டிருந்த என்னை இராஜபத்தினியாக்கி, உலகத்தில் மேலான பாக்கிய போகங்களைத் தந்தருளிய தெய்வமாகிய உமக்குச்

சொல்லப்படாத இரகசியமும் உண்டோ? இளமையில் நான் பட்ட கஷ்டத்தை நினைக்கும்போது உடலும் மனமும் பதைக்கின்றன. ஆதலால் அப்படிச் சொன்னேன். மன்னிக்கவேண்டும்" என்று கூறி, தன் வரலாறு முழுவதுமெடுத்துச் சொன்னாள்.

இராஜகுமாரன் கேட்டு, "நமது இராஜ்யத்தில் இப்படிப்பட்ட பாவிகள் இன்னும் இருக்கிறார்களா? இத்தன்மையான பாவிகள் இருந்ததனால் அல்லவோ எனக்கும் சிமைக்குந் தீராத துக்கம் நேரிட்டது! இருக்கட்டும்" என்று சொல்லி அவளை மகிழ்வித்தான். சில நாட்பொறுத்து ஒரு நாட்காலையில், இராஜகுமாரன், தானும் தன் மனைவியுமாக மேன் மாடிச் சாளர வழியாகப் பார்த்துக்கொண் டிருக்கும்போது சில குற்றவாளிகளைக் காலில் விலங்கு பூட்டி அரசாங்க உத்தியோகஸ்தர் தெருவில் கொண்டு வருவதையும், அக்குற்றவாளிகள் கடினமான வேலைசெய்து உழல்வதையும், உத்தியோகஸ்தர்கள் அவர்களை இரத்தமொழுக அடித்து வேலை வாங்குவதையும் சௌந்தரிகண்டு மனம் பதைத்துத் தன் கணவனை நோக்கிச் "சுவாமி! இவர்கள் இப்படித் துன்பப்படும்படியாக என்ன குற்றஞ்செய்தார்கள்?" என்றாள். அவன் "பெண்ணே! தாய் தந்தையில்லாத அநாதையான இளங் குழந்தைகளை மனதில் இரக்கமின்றித் துன்பப்படுத்தியவர்களைத் தெய்வந் தண்டியாதா? உன்னைத் துன்பப்படுத்திய மஹா பாவிகள் தாம் இவர்கள், இப்பொழுது இவர்களுக்கு இத்துன்பம் நேரிட்டது. அஃது அவர்களுக்குத் தகுந்த தண்டனை தான்" என்றான். சௌந்தரி அதைக்கேட்டு "என் சிற்றப்பனும் சிறிய

தாயாருமா இப்படிக் கஷ்டப்படுகிறார்கள்? அவர்களுக்கு விடுதலையில்லையா?" என, அரசன், அவர்களுக்குக் கடின தண்டனை செய்யாவிட்டால் குடிகள் பயப்படமாட்டார்கள்; பாவிகளாய் விடுவார்கள்; அந்தப் பாவம் அரசனைச் சூழும்" என்றான். சௌந்தரி, "சுவாமி! என் சிறிய தாயாரும் அவளுடைய குழந்தைகளும் துரோகிகள்! சிறிய தகப்பன் நல்லவன்; கபடு சூது தெரியாதவன்; என்னை மிகவும் நேசித்தான். இந்தச் சங்கதி அவனுக்குத் தெரியாது; அவன் நிமித்தம் மன்னிக்கக் கூடாதோ?" என்றாள். இராஜகுமாரன், "ஆம் 'நல்லா ரொருவருளரே லவர்பொருட் டெல்லார்க்கும் பெய்யு மழை' என்றபடி ஒருவன் நல்லவனா யிருந்தால் மன்னிக்கலாம்" என்றுகூறி வேலைக்காரனைக் கூப்பிட்டு, அந்தக் குற்றவாளிகளை அரண்மனைக்குள் அழைத்து வரக் கட்டளை யிட்டான்.

அவர்கள் வந்தபோது இராஜகுமாரன் அவர்களை நோக்கி "ஏ! மூடர்களே! இந்தச் சௌந்தரி இளமையாயிருந்தபோது அவளை என்னபாடு படுத்தினீர்கள்? இப்பொழுது இவள் அரசியா யிருந்து சௌக்கியப்படுகிறாள். உங்களுக்கு இந்தக் கஷ்டம் வந்து சம்பவித்தது" என்றான். அவர்கள் சௌந்தரி முகத்தை யேறிட்டுப் பார்த்து அவளை யின்னாளென்று தெரிந்துகொண்டு நாணித் தலைகுனிந்து நின்றார்கள். இராஜகுமாரன், சிற்றப்பனை நோக்கி "நீ சௌந்தரியிடம் பிரியமாயிருந்த படியால் உன் நிமித்தம் இப்பொழுது எல்லாரையும் விடுதலை செய்கின்றேன். இனிமேல் தெய்வத்துக்குப் பயந்து நடவுங்கள்" என்று அவர்களுடைய கால் விலங்குகளை

வெட்டி விட்டான். சௌந்தரி, தன் சிற்றப்பனைக் கட்டிக்கொண்டு அழுது, அவனுக்கு உபசாரங்கூறி வேண்டிய பொருள் கொடுத்து, சிற்றன்னையையும் அவள் மக்களையும் ஆதரித்து அனுப்பினாள். எல்லாரும் தெய்வகடாக்ஷத்தால் பரமசுகத்தை அனுபவித்துக்கொண்டு புத்திர பௌத்திர வர்க்கங்களோடு வாழ்ந்திருந்தார்கள்.

சௌந்தரி என்னும் வணக்கமுள்ள
ஏழைப்பெண் கதை
முற்றிற்று.

---

## ஐந்தாவது

## மந்திரி பெண் மஹாராஜாத்தியான கதை.

---

மிதுலாபுரி யென்னும் பட்டணத்தில் சக்கரேசுவரன் என்னும் அரசன் மஹா வீரபராக்கிரம சாலியாய்ச் சகல அரசர்களையும் வென்று ஜயித்துச் சக்ரவர்த்தியாய் உலக முழுவதும் செங்கோல் செலுத்தி வந்தான். அவனுக்குப் புருஷோத்தமன் என்கிற ஒரு விவேகியான மந்திரியிருந்தான். அரசனுக்குச் சத்துருபயங்கரன் என்றொரு புத்திரன் பிறந்து மஹா புத்திசாலியாய்ப் பாடசாலையில் கல்வி பயின்று வருகிற நாளில், மந்திரி புத்திரி குணவதி என்பவளும் அதே பாடசாலையில் கல்வி பயின்று வந்தாள். அவளும் அரசகுமாரனும் வெகு நேசமாயிருந்தார்கள். பாடசாலைக்குப் போகும்போதும் திரும்பி வரும்போதும் இருவரும் சேர்ந்து போவ

தும் வருவதும் வழக்கம். ஒருவரை யொருவர் பிரியாமல் விளையாடிக்கொண்டு மிருப்பார்கள். மந்திரி புத்திரி குணவதியும் ரூபவதியு மாதலால் அரசகுமாரன் அவளை மணம் புரியக் கருதி யிருந்தான். அவளும் அப்படியே மனதுக்குள் எண்ணியிருந்தாள். இவ்விருவரும் இணைபிரியா நேசரா யிருப்பதை யறிந்த மந்திரியும் அரசனும் சமயம் நேர்ந்தால் அவ்விருவருக்கும் விவாகம் முடிப்பதே உத்தமமென்று கருதி யிருந்தார்கள்.

ஒருநாள் அரச குமாரனும் மந்திரி குமாரத்தியும் பள்ளிக்கூடத்துக்குப் போய் மீண்டு வருகிற போது அரச குமாரன் விளையாட்டாகத் தன் கையிலிருந்த மோதிரத்தைக் கீழே நழுவவிட்டு, மந்திரி மகளை "அடியே! இந்த மோதிரத்தை யெடுத்து என் கையில் போடு" என்றான். மந்திரி குமாரத்தி அது பொறுமல் "என்னை அடீ! என்று அழைப்பதற்கு நீ யார்? அப்படி இனி மேல் அழையாதே; அழைத்தால் மனஸ்தாபம் நேர்ந்துவிடும்" என்றாள். அரச குமாரன் "நான் இராஜபுத்திர னல்லவா? என்னை அவமரியாதை செய்யலாமா!" என்றான். "நான் அவமரியாதையாக ஒரு வார்த்தையுஞ்சொல்லவில்லை. நீர் சொன்ன பேச்சு தகாது என்று மாத்திரம் சொல்லுகிறேன்" என்றாள். அரச குமாரன் "நான் உன்னை மணம் புரிவதாகக் கருதி யிருக்கிறேன்; அதனால் அப்படி அழைத்தேன்; அதனால் குற்றமென்ன?" என்றான். "நீர் மணம் புரிந்த பிறகு நான் உமக்கு உரியவள் என்பதில் தடையில்லை. இப்பொழுது நான் கன்னிகை யாதலால் உமக்காவது மற்றொருவருக்காவது சொந்தமில்லை. என் மாதா

பிதாக்கள் யாருக்குக் கொடுக்கிறார்களோ அவர் தான் என் கணவர். அவர் தான் என்னை அடீ யென்று அழைக்கப் பாத்தியமுள்ளவர்; நீர் தான் எனக்குக் கணவனாக வருவீரென்று நிச்சயமாக எப்படிச் சொல்லலாம்? ஆதலால் நீர் அடீயென்று அழைத்தது தவறு" என்று சொன்னாள். அரசகுமாரன் இதனால் மனம் வருந்தி "நல்ல திருக்கட்டும். நான் உன்னை நிச்சயமாகவே மணம்புரிந்து உன் கர்வத்தை அடக்குகிறேன்" என்று சபதம் பண்ணினான். மந்திரி குமாரத்தி "அப்படியானால் அப்பொழுது நீர் என் மேல் மனஸ்தாபம் கொள்ளாதபடி நடந்து கொள்ளுகின்றேன்" என்றாள்.

பின் இருவரும் தத்தம் வீடு போய்ச் சேர்ந்தார்கள். மந்திரி குமாரத்தி, இரவெல்லாம் தூக்கமில்லாமல் புரண்டுகொண் டிருந்தாள். தான் செய்தது நியாயமென்று அவளுக்குத் தோன்றினாலும், அரசகுமாரன் சிறைசெய்து அவமானப் படுத்தவுங் கூடும்; அதற்கு என்ன செய்யலாமென்பதே அவளுடைய கவலை. பின் ஒரு வாறு மனந்தேறி, விடிந்தது மெழுந்திருந்து அரண்மனைக்குப் புறத்திலிருக்கும் கிராமதேவதை கோவிலுக்குப்போய் முறையிட்டாள். அன்று முதல் தினந்தோறும் இரண்டு வேளையும் கோவிலுக்குந் தப்பாமற்போய் ஸந்நிதானத்தில் தன் குறைகளைச் சொல்லி, "என்னைக் காத்து இரக்ஷிக்கவேண்டும்" என்று கூறிப்பிரார்த்தித்து வந்தாள்.

ஒரு வருஷம் ஆயிற்று. ஒரு நாள் காலையில் கோவிலுக்குப் போய்த் தரிசனஞ் செய்யும்போது தேவதை பிரத்தியக்ஷமாய், "அம்மா! நீ ஒன்றுக்

கும் அஞ்சாதே! இந்தச் சிமிழில் ஒரு மோதிரமிருக்கின்றது ; இதைத் தினந்தோறுங் காலையில் பூசித்துக் கையிலணிந்து கொண்டால் எல்லோருடைய மனத்திலிருப்பதுந் தெரியும். நீ நினைத்தபடியெல்லாம் நடக்கும். உனக்கொரு குறைவும் வராது ; போ" என்றது. மந்திரி மகள் மிக மகிழ்ந்து அம்மையை வணங்கி விடை பெற்றுக்கொண்டு வீடுவந்து சேர்ந்தாள். அன்று முதல் மோதிரத்திற்குத் தினந்தோறுங் காலையில் பூசைசெய்து கையிலணிந்துகொண்டு வருவாள். அதனால் தன்னிடம் வருபவருடைய மனக் கருத்தெல்லாம் அவளுக்கு நன்றாய்த் தெரிய வந்தது. எல்லோருடைய மனதுக்குந் திருப்தி யுண்டாகும்படி நடந்ததனால் எல்லாரும் அவளை மெச்சிப் புகழ்ந்தார்கள்.

அரச குமாரன் இதையெல்லாங் கேட்டு மன மகிழ்ந்து, எப்படியும் அவளையே விவாகஞ்செய்து அவளைச் சிறைவைத்து, அவள் எப்படி நடந்து கொள்கிறாளென்று பார்க்க வேண்டுமென்று கருதினான். அதே கவலையாய் ஒன்றையும் கவனியாமல் இந்த எண்ணத்தைப் பிதாவுக்கு எப்படித் தெரிவிக்கிறதென்று மனம் வருந்தி வந்தான். இதனால் அவன் நாளுக்கு நாள் இளைக்கத் தொடங்கினான். சக்கரவர்த்தி ராஜன் தன் புத்திரன் சரீரம் மெலிவதை யறிந்து தன் மனைவியை யழைத்து "நம் குமாரன் நாளுக்கு நாள் இளைக்கவேண்டிய காரணமென்ன ? மந்திரி மகளைப் பிரிந்திருப்பதனால் இருக்கலாமென்று நினைக்கிறேன். அப்படியானால் இப்பொழுது தானே விவாகத்தை முடித்துவிடுவோம் அதை விசாரி" என்றான். அவள் அப்படியே விசாரித்து அரசன் சொன்னது

சரியாயிற்றென்று கருதி மகிழ்ந்து, குமாரனைப் பார்த்து "அப்பா! இந்த க்ஷணமே மந்திரி மகளை உனக்கு மணம் புரிவிக்கிறேன்; நீ வருந்தாதிரு" என்று கூறி இதை அரசனுக்குத் தெரிவித்தாள். அரசன் மகிழ்ந்து மந்திரியோடு கலந்து பேசி முகூர்த்தம் வைத்துக்கொண்டு, சீக்கிரத்தில் விவாகத்தை நிறைவேற்றினான். விவாகமானதும் அரசன் தன் புத்திரனுக்குத் தனியாக ஓர் அரண்மனை கொடுத்து அதில் வசிக்கும்படி சொன்னான். அரச குமாரன் அப்படியே அந்த அரண்மனையில் குடிபுகுந்து மந்திரி மகளைச் சிறை செய்தான். அவளோடு பேசுவதில்லை. எப்படியாவது அவளிடத்தில் குற்றம் கண்டுபிடித்து அவளைத் தண்டித்துத் தன் சபதத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது அவனுடைய கருத்து. தனக்கு இன்னது வேண்டுமென்றும் அவளுக்குச் சொல்வதில்லை. ஆனாலும் மந்திரி மகள் அவனுடைய கருத்தைத் தெரிந்துகொண்டு, அவனிஷ்டம் போல வேண்டுவதை எல்லாஞ் சரியாகத் தயார் செய்து வைத்திருப்பாள். அதைக்கண்டு அரச குமாரன் மகிழ்ந்து "இது என்ன ஆச்சரியம்! நம் கருத்து இவளுக்கு எப்படித் தெரியும்? இப்படி நமக்கு வேண்டியவற்றைக் குறைவற நிறைவேற்றி வைத்திருக்கின்றாள்! இன்னம் பார்ப்போம்" என்றிருந்தான். எத்தனை நாள் பார்த்தாலும் குற்றங்காண முடியவில்லை. அதனால் அரச குமாரன் அதிசயித்திருந்தான்.

இப்படி யிருக்க, ஆந்திர தேசத்து அரசனுக்கு ஒரு புத்திரியிருந்தாள். அவ்வரசன் அவளுக்குச் சுயம் வரம் சாற்றிவைத்தான்; அதற்காக இந்த

அரச குமாரனுக்கும் சமாசாரம் சொல்லி அனுப்பினன். அரச குமாரனும் அந்தச் சுயம்வரத்துக்குப் போக விரும்பிப் புறப்பட்டான். அப்போது தன் மனைவியைப் பார்த்து "நான் வர மூன்று வருஷம் செல்லும்; அதற்குள்ளாக நீ எனக்கொரு புத்திரனைப் பெற்று வைத்திருக்கவேண்டும். வீடு வாசல் எல்லாம் சொர்ணமயமாக இருக்கவேண்டும். நமது அரண்மனையைச் சூழ ஓர் ஆறு ஓடிக்கொண்டிருக்க வேண்டும். அதன் இரு பக்கத்திலும் இரண்டு மலைகளிருக்கவேண்டும். அதன் மேல் பெரிய கோட்டை கொத்தளங்களிருக்க வேண்டும். இவ்வளவும் இல்லாவிட்டால் உன்னைத் திரும்பிப் பார்க்கமாட்டேன். பின் உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லை" என்று சொன்னன். அவனுடைய மனதிலிருக்கும் வஞ்சனையான எண்ணத்தை யுணர்ந்த மந்திரிமகள் "அப்படியே செய்கிறேன்" என்று சம்மதித்தாள். பிறகு இராஜகுமாரன் புறப்பட்டுப் போய் விட்டான். இரண்டு காததூரம் போனவுடன் அங்கோரிடத்தில் இராஜகுமாரன் இறங்கினன். சற்றுநேரத்துக்கெல்லாம் ஒரு பாலியமுள்ள குதிரை வீரனும் அங்கே வந்து இறங்கினன். இராஜகுமாரன் அவனைப்பார்த்து "நீ யார்? உன்பேரென்ன? எந்த ஊர்? எங்கே போகிறாய்?" என்றான். குதிரை வீரன்; "ஐயா! நான் நரேந்திரபுரியிலுள்ள ஒரு யுத்தவீரன்; என் பேர் வீரசேகரி; ஆந்திர தேசத்து இராஜாவின் பெண்ணுடைய சுயம்வர வைபவத்தைப் பார்க்கப்போகிறேன்" என்றான். இராஜகுமாரன் "நீ அந்தப் பெண்ணை மணம் புரிய விரும்புகிறாயா?" என்றான். வீரசேகரி, "அப்படி எண்ணமில்லை,

குதிரை வீரன் இராஜகுமாரத்தியை இச்சித்தால் கிட்டுமா? அவர்கள் கொடுக்கச் சம்மதிப்பார்களா? அவர்கள் சம்மதித்தாலும் அங்கே வந்திருக்கும் இராஜ சமூகத்தார் விடுவார்களா? அது முடியாத காரியம். பின் என்னவென்றால், ஆந்திர இராஜனிடத்தில் ஓர் அற்புதமான தெய்வக்குதிரை யிருக்கிறதாம். அதன்மேல் ஒருவரும் ஏறமுடியாதாம். அதைத் தான் தன் பெண்ணுக்குப் பரிசாக வைத்திருக்கிருனும். எந்த இராஜன் அந்தக் குதிரையின் மேலேறி, அந்த நகரத்தை மூன்று பிரதக்ஷிணம் வருவானே அவனுக்குத்தான் அந்தப் பெண் உரியவளாம். நான் ஒரு குதிரை வீரனுகையால் அதன்மேலேறிச் சவாரி செய்யும் வீரனேயும், அந்தக் குதிரையின் மகிமையையும் பார்க்க விரும்பிப் போகிறேன்'' என்று கூறித், "தாங்கள், யார்? எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டான்.

இராஜகுமாரன், நான் மிதிலாபுரியை யாளும் சக்கரேசுவரனுடைய புதல்வன்; அந்தச் சுயம்வரத்துக்காகத்தான் போகிறேன்; எனக்கு நல்ல துணை கிடைத்தது'' என்றான். உடனே வீரகேசரி எழுந்து அவனை வணங்கி "எங்கள் சக்கரவர்த்தியின் குமாரனென்று எனக்குத் தெரியாது. என்னை மன்னிக்க வேண்டும். குதிரை யேறுவதில் எனக்கு மிஞ்சினவர்கள் உலகத்தில் கிடைப்பதரிது; எனக்கு அசுவஹிருதயம் என்னும் மந்திரம் தெரியும்; அதனால் எப்படிப்பட்ட குதிரையையும் அடக்கியாளும் வல்லமை எனக்குண்டு; எனக்கு உத்தரவளித்தால், தங்களுக்குப் பதிலாய் நான் குதிரைச்சவாரி செய்கிறேன். தாங்கள் அந்தப் பெண்ணை மணம்புரியத் தடை

யிராது" என்றான். இராஜகுமாரன் மகிழ்ந்து "அதற்காக உனக்கு வெகுமதி வேண்டுமோ?" என்றான். அவன் "தங்கள் போர்ச்சேனையில் எனக்குத் தலைமை உத்தியோகம் கொடுக்க வேண்டுகிறேன்" என்றான். அரசகுமாரன் அப்படியே சம்மதித்து அவனைத் தன் சேனாதிபதியாக அப்பொழுதே நியமித்துக் கொண்டான்.

மறுநாள் விடிந்ததும் இருவரும் புறப்பட்டுப் போனார்கள். சில நாளில் ஆந்திரதேசத்து இராஜநகரை யடைந்தார்கள். அரசகுமாரன் வீரகேசரியைப் பார்த்து "நாம் தங்குகிறதற்கு ஒரு ஜாகை வேண்டுமே, அதை நீ தான் தயார் செய்யவேண்டும். சுயம்வரம் இன்னம் ஒருமாதம் இருக்கின்றது. அதற்குள் இராஜக்கூட்டங்கள் வந்து நிறைந்துவிடும், இனி இடம் அகப்படாது. ஆகையால் இரண்டு மாதத்துக்கு ஒரு வீட்டைக் குடிக்கூலிக்கு அமர்த்து" என்றான். அப்படியே வீரகேசரி ஒரு வீட்டை அமர்த்தி விட்டு, இராஜகுமாரனிடத்தில் விரைந்து வந்து "சுவாமி! தெய்வ வசத்தால் ஒரு நல்ல வீடு கிடைத்தது. அதன் பின்கட்டில் சொந்தக்காரர் இருக்கிறார்கள். முன்கட்டு நமக்குக் கிடைத்தது. மாதமொன்றுக்கு நூறு ரூபா வாடகை" என்றான். அரசகுமாரன் சம்மதித்து அதிலிறங்கினான். சேனாதிபதி ஒரு சோற்றுக்கடையில் போஜனத்துக்குத் திட்டஞ் செய்து கொண்டான். அவன் போஜனத்துக்குப் போகும் நேரந்தவிர மற்ற வேளை அரசனிடத்தில் ஊழியஞ் செய்து வந்தான். இப்படி இரண்டு மூன்று நாட்களானதும், பின்கட்டில் சௌந்தரியம் நிறைந்த

ஒரு யுவதி இருப்பதை அரசகுமாரன் கண்டு அவளோடுறவாடினான்.

இப்படியிருக்கச் சுயம்வர தினம் சமீபித்தது. அன்று சகல இராஜர்களும் சுயம்வரச்சாலைக்கு வந்து சேர்ந்தார்கள். அரசகுமாரனும் தன் சேனாதிபதியோடு அவ்விடம் வந்து சேர்ந்தான். அப்பொழுது ஆந்திர தேசத்து இராஜகுமாரன் சபைக்கு முன்பாக வந்து நின்று "மஹாராஜர்களே! இதோ இருக்கிற குதிரையைப் பார்த்தீர்களா? இந்தத் தெய்வக் குதிரையின்மேலேறி இந்த நகரத்தை மூன்று பிரதக்ஷிணம் செய்து வருகிற வீரபராக்கிரமசாலிக்கே என் தங்கை உரியவள்" என்று சொன்னான். அதைக் கேட்ட சில அரசர்கள் "இந்தக் குதிரையைப் பார்க்கிறதற்கே பயமாயிருக்கிறதே! இதனருகே யார் போவார்கள்" என்று சொல்லிக் கொண்டார்கள். சிலர் "இதன் மேலேறவும் வேண்டாம்; நமக்கு அந்தப் பெண்ணும் வேண்டாம்" என்றார்கள். பின்னும் சிலர், "இந்தக் குதிரையேறிச் சவாரிசெய் என்பதற்குப் பதிலாக நீங்கள் உங்கள் தேசங்களுக்கு மீண்டும் போங்களென்று சொல்வது மேலாகும்" என்றார்கள். சிலர் "இதன் மேலேறிச் சவாரி செய்யும் வீரன் யாரோ பார்க்கவேண்டும்" என்றார்கள். வீரராயிருப்பவர்களுள் சிலர் குதிரையினருகே போய் அதன் கனைப்பைக்கேட்டு நடுங்கித் தம்மிருப்பிடம் வந்து உட்கார்ந்தார்கள். இப்படி அரசர்கள் குதிரையேற அஞ்சியிருக்கிறதை ஆந்திரராஜன் பார்த்து நமது குமாரத்திக்கு விவாகமாகாதுபோலிருக்கிறது என்று மனம் வருந்தினான். அப்பொழுது வீரகேசரி எழுந்திருந்து, மஹாராஜனை நோக்கி, "மஹா

ராஜாவே! நான் இந்தக் குதிரைமீது சவாரிசெய்ய விரும்புகிறேன். நான் என் எஜமானுக்குப் பதிலாய்ச் சவாரி செய்கிறேன், சவாரி செய்தால், உமது பெண் என் எஜமானனுக்குரியவள்" என்றான். அப்படியே யாவரும் ஒத்துக்கொண்டார்கள்.

சேனாதிபதி குதிரையி னருகேபோய், அதைப் பார்த்து "முன்காலைத் தாழ்த்திப் படு" என்றவுடன், அது தன் முன்கா லிரண்டையும் மண்டிபோட்டுப் படுத்தது. சேனாதிபதி அதன் மேலேறிக் கடிவாளத்தைக் கையில் பிடித்துக்கொண்டு பால சூரியனைப் போல விளங்கினான். எல்லாரும் ஆச்சரியப்பட்டு, அவனைப் புகழ்ந்துகொண் டிருக்கும்போதே குதிரை மனோ வேகமாய்ப் பறந்தது. அந்த வேகத்தினால் குதிரை ஒருவர் கண்ணுக்குந் தெரியவில்லை. தூளி படலம் ஆகாசம் முற்றும் பறந்து மூடிக்கொண்டது. கண்மூடித் திறக்குமுன் நகரை மூன்று பிரதக்ஷிணம் வந்து நின்றது. எல்லாரும் கைகொட்டி ஆரவாரஞ் செய்து களித்தார்கள். சேனாதிபதி அரசனை நோக்கி "மஹாராஜாவே! உம்முடைய குமாரத்தி என்னுடைய இறைவனாகிய சத்துரு பயங்கர மஹாராஜனுக்கு உரியவள்" என்றான். அரசன் மகிழ்ந்து "ஆம்" என்றான். பிறகு விவாகம் முடிந்தது. அரசகுமாரன் இராஜ குமாரத்தியோடு சுகமாக வாழ்ந்து வந்தான். ஆறுமாத காலமாயிற்று. சத்துருபயங்கரராஜன் தன் சேனாதிபதியை நோக்கி "நீ நம் தேசத்துக்குப் போய்ச் சேரு; நான் இன்னும் ஒரு வருஷம் கழித்துப் புறப்பட்டுத் தேசங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்து சேருகிறேன். நான் ஊருக்கு வந்து சேர இரண்டு வருஷங்களுக்கு

மேலாகும். நீ அது வரையில் நமது அரண்மனை
யைப் பாதுகாத்திரு" என்று கூறி அவனுக்கு
ஆடையாபரணாதி வெகுமதி அளித்து அனுப்பினான்.

வீரகேசரி அப்படியே மிதுலாபுரி வந்துசேர்ந்து,
சக்கரேசுவரனுக்கு இந்தச் சமாசாரத்தைத் தெரி
வித்துவிட்டுத் தான் ஒரு தனி ஜாகையிலிருந்தான்.
இரண்டு வருஷங்களும் கழிந்தன. சத்துரு பயங்கர
ராஜன் இன்னும் ஒரு மாதத்தில் ஊர் வந்து சேர்வ
தாகச் சமாசாரந் தெரிவித்தான். அதையறிந்து
சேனாதிபதி மஹாராஜனிடம் போய் "நான் என்
ஊரை விட்டு வந்து நான்கு வருஷமாயின. இராஜ
குமாரன் வந்து விட்டால் அப்புறம் என் சுதேசம்
போகமுடியாது. நான் இப்பொழுது என் ஊருக்
குப்போய், என் மாதாபிதாக்களையும், மனைவியையும்
அழைத்துக்கொண்டு, சீக்கிரம் வந்து சேருகிறேன்;
எனக்கு விடை தரவேண்டும்" என்று கேட்டுக்
கொண்டு போய்விட்டான்.

ஒரு மாதத்துக்கெல்லாம் அரசகுமாரன் தன்
இளைய மனைவியோடு கூட ஊர்வந்து சேர்ந்து இராஜ
குமாரத்தியைத் தனியான ஒரு மாளிகையில் வைத்து
விட்டு, மந்திரி மகள் மாளிகைக்கு வந்து சேர்ந்தான்.
தான் சொல்லிப் போனபடியே எல்லாம் சமைந்
திருக்கக் கண்டு வியப்படைந்து உள்ளே நுழைந்து
பார்க்க, மந்திரி மகள் இரண்டு வயதுள்ள தன் புத்
திரனோடு விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து,
"என்னடீ, இந்தக் குழந்தை யாருடையது?" என்று
கேட்டான். அவள் உம்முடைய குழந்தை தான்;
நீங்கள் போகும்போது உத்தரவு கொடுத்தீர்களே!
அதேபிரகாரம் இக்குழந்தை பிறந்தது; வளர்த்து

வந்தேன்" என்றாள். அரசகுமாரன் மனத்துக்கடங்காத கோபங்கொண்டு "பாதகி! திருட்டுத்தனம் செய்து விட்டாயா? துரோகி!" என்று வைய, மந்திரிமகள் "இல்லை இல்லை; உமதுத்தரவின்படி தான் இந்தக் குழந்தையைப் பெற்றேன்" என்றாள். அவன் அது கேட்டு அதிகக் கோபங்கொண்டு, "அடி பாதகி! இதை உன் தகப்பனுக்கும், அரசனுக்குந் தெரிவித்து, உன்னைச் சித்திரவதை செய்கிறேன்" என்று கூறிவிட்டு மகா கோபத்தோடு புறப்பட்டு வெளியே போய்விட்டான்.

பிறகு அவன், மந்திரிக்கும் அரசனுக்கும் இச் சமாசாரத்தைத் தெரிவித்து, இதைத் தீர விசாரித்து "என் மூத்தமனைவியைத் தகுந்தபடி தண்டிக்கவேண்டும்; பொய் சொல்லுகிறாள்" என்றான். மந்திரியும் அரசனும் நாணி, உடனே மந்திரிமகளை அழைத்து விசாரணைசெய்ய அவள் "என் கணவனுத்தரவின்படி பிறந்தது குழந்தை" என்றாள். அரசன் "இதை எப்படி நம்புகிறது?" என்றான். அவள், "வீரகேசரிக்குத் தெரியும், அவன் வந்தால் எல்லாம் வெளியாகும்" என்றாள். அரசன் உடனே வீரகேசரிக்கு ஆளனுப்பிவிட்டு, மந்திரி மகளை அவள் மாளிகைக்கு அனுப்பி இரகசியமாய் அவள் வீட்டைக் காவல் செய்தான்.

இரண்டுநாள் பொறுத்து வீரகேசரி இராஜ சபைக்கு வந்து அரசனையும் அரசகுமாரனையும் வணங்கித் தன் ஆசனத்தில் உட்கார்ந்தான். அரசன் அவனிடம் செய்திசொல்லி, "வீரகேசரி! மந்திரி மகளை விசாரித்ததில் அவள், உன்னைக் கேட்டால் தெரியுமென்று சொன்னாள். அதன் விவரமென்ன? உனக்குத் தெரிந்தால் சொல்" என்றான். வீரகேசரி

"சுவாமி! பெண்பாவம் பெரிது; இந்த இராஜகுமாரன் மந்திரி மகளைக் கூடவே அழைத்துக்கொண்டு ஆந்திரதேசம் போனார். அவள் தன் நாயகனை விட்டுப் பிரியவேயில்லை. அவ்வூரிலேயே அவள் இளவரசோடு நான்கு மாதம் இருந்தாள். அது எனக்கு நன்றாய்த் தெரியும். அவர் குழந்தைதானிது. அவள் பேரில் யாதொரு தோஷமுமில்லை. அவள் மகா பதிவிரதை; இராஜகுமாரன், இளையாளிடங் கொண்ட பிரியத்தால் இவள் பேரில் குற்றஞ் சுமத்துகிறார் போலிருக்கிறது. இது மஹாபாபம்!" என்றான். இராஜகுமாரன், "வீரகேசரீ! என்னைப் பார்த்துச் சொல்? நான் உன்னை நம்பியிருந்தேனே! என்னைக் கொஞ்சங்கூட மதியாமல் பேசுகிறாயே! இது நியாயமா?" என்றான். அவன் "மஹாப்பிரபோ! நீங்கள் என்னை நம்பியிருந்தது உண்மையே! அதற்காக நான் பொய்கூறலாமோ? மந்திரி புத்திரியை நீர் உம்முடன் அழைத்துக் கொண்டு போகவில்லையா? அவளோடுகூட எட்டு மாதம் நீர் வாழவில்லையா? ஏன் வீணில் பெண்மீது பழி சுமத்துகிறீர்? இந்த அற்ப விஷயத்துக்காக நானுங் கூடப் பொய் பேசவேண்டுமா?" என்றான்.

அரசகுமாரன் கண்கள் சிவந்து மீசை படபடவென்று துடிக்க "வீரகேசரீ! தெய்வத்துக்கு முன்னிலையில் பொய்கூறாதே; நிஜத்தைச் சொல்" என்றான். வீரகேசரி, "சுவாமீ! நான் நிஜமே கூறுகிறேன்" என்றான். மந்திரியும் அரசனும் இது என்ன விந்தை! என்று திகைத்து நின்றார்கள். அரசன் "வீரகேசரீ! நீ சொல்வது நிஜந்தானா? நிஜமானால் அதை யெப்படி நிரூபிக்கின்றாய்?" என, சேனாதிபதி,

"மஹாராஜாவே! சொல்வதெல்லாம் நிஜமே! இந்த இராஜகுமாரன் என்னையும் மந்திரி மகளையும் கூடவே அழைத்துப் போனார். அவ்விடத்தில் மந்திரி மகளுக்குச் சில ஆபரணங்களும் பட்டாடைகளும் வாங்கிக் கொடுத்தார். நான் தான் ஆந்திர தேசத்துத் தட்டாரிடத்தில் அந்த நகைகளை வாங்கிக் கொடுத்தவன். இது பொய்யாகுமா? அது மெய்தானுவென்று இராஜகுமாரனைக் கேளுங்கள். நான் நிரூபிக்கிறேன்" என்றான். இராஜகுமாரன் "நான் வாங்கச் சொன்னது உண்மைதான். ஆனால் மந்திரி மகளுக்கல்ல; மந்திரிமகள் அவற்றைக் கொண்டுவரட்டும் பார்ப்போம்" என்றான். "அரசன் என்ன சொல்லுகிறாய்" என்றான் வீரகேசரி, "அப்படியே கொண்டுவரச் சொன்னால் அவள் கொண்டு வருவாள்" என்றான். அரசன் ஒரு சேவகனை நோக்கி "மந்திரி மகளை அழைத்துவா" என்றவுடன், வீரகேசரி, "சுவாமி மந்திரிமகள் இங்கேயே யிருக்கின்றாள். வீட்டில் இல்லை" என்றான். அரசன் ஆச்சரியப்பட்டு எங்கே யென்றவுடன், வீரகேசரி யாவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மந்திரிமகளாக மாறி நின்று, தானணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றி வைத்து, "இவைதாம் அவை" என்றாள். யாவரும் அதிசயித்து "இதுவென்ன விநோதம்!" என, மந்திரி மகள் தனக்கும் தன் கணவனுக்கும் இளமையில் நடந்த வாக்கு வாதங்களையும், அதற்காகவே அவன் தன்னை மணந்து சிறை செய்ததையும், சுயவரத்துக்குப் போகும்போது தான் வீரகேசரியாக உருமாறிக் கூடவேபோய்க் குதிரையேறி, இராஜகுமாரத்தியை மணம் புரிவித்ததையும், அவ்வூரில் தான் பெண்ணு

யிருந்து அவளே [illegible] வாழ்ந்து புத்திரனைப் பெற்றதை யும் சவிஸ்தாரமாகச் சொன்னாள். எல்லாரும் அவ ளுடைய புத்திசாலித் தனத்துக்கும், அவள் செய்த சாகசத்துக்கும், அவளுடைய கற்புடைமைக்கும் மெச்சி னார்கள். அரசன் தன் குமாரனை நோக்கி "இனி உன் கருத்தென்ன?" என்று கேட்டான்; அவன் மனமகிழ்ந்து "எல்லாம் சரியே! யாதுந் தப்பில்லை. அவள் கற்புடைமை கெடாத உத்தமி" என்று புகழ்ந்து அவளை மிக்க நேசித்து அங்கீகரித்தான். மந்திரி தன் மகளைப் புகழ்ந்து "நீ உன் கணவனோடு நீடூழி வாழ்க!" என்று வாழ்த்தினான். இராஜகுமாரன் தன் இரண்டு மனைவிகளுடன் நீடூழி வாழ்ந்துவந்தான்.

மந்திரி பெண் மஹாராஜாத்தியான கதை
முற்றிற்று.